உ

சோதிமாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

சோதிட கேரளம்.

3911

சென்னை-இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை) 1934 அணா 0—12—0.

2

V. PR. PL.
M.K.
Paganeri
6.2.35

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION,
PAGANERI.

PRESENTED BY:
V. ...
KASIVI...

உ

சோதிமாமுனிவர் 3911

திருவாய்மலர்ந்தருளிய

சோதிட கேரளம்.

பல சோதிடர்களால்

ஒழுங்கு சேர்க்கப்பட்டு

ஆறுமுக முதலியாரால்

பரிசோதித்து.

இட்டா - குப்புசாமி நாயுடு அவர்கள்

பதிப்பின் கிணங்க

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

Copy Right.) 1934 (அணா-12

உ

கடவுள் துணை.

சோதிமாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய 3911

சோதிட கேரளம்.

விநாயகர் தோத்திரம்.

கலி விருத்தம்.

ஆதிசத்தியருள்குமராசரண்
நீதியுற்றநினைத்ததோர்காரியம்
பாதியங்குசபாசனைப்போற்றியே
சோதிமாமுனிசொல்லத்துணிகுவாம்.

இதுவுமது.

சொல்லுங்கேரளசோதிடசாததிரம்
புல்லுமாந்தர் புகலுநற்றீமையை
அல்லும்பகலுமவனியிலியாவருந்
தொல்லைநீங்கத்துணிவுடன்கூறுவாம் 2

பொதுத்தோத்திரம்.

பார்வதிமைந்தன்தொந்தி பசுபதிபிரமன்விட்ணு
கார்முகன்கந்தனேழு கனத்ததோரிஷிகடங்கள்
சீர்பதந்தெண்டனிட்டுத் தெரிசித்துவேண்டல்செய்தே
ஓர்மதியுதயங்கொண்டிங் குற்றதுகூறலுற்றும்.

பாயிரம்.

நலலதோர்வேதமூர்த்தி நாதனுர்சொன்னநூலாம்
வல்லதோர்கிரந்தவாக்கிய மதையிந்தமாநிலத்தில்
சொல்லதுதெரியாதாற்குச் செந்தமிழுரைத்தவேத
வல்லவன்சோழிநூலில் வருத்தலங்காரந்தானே 4

நூற் பயன்.

செகத்தனிலுதித்தபேர்க்குச் செல்வமும்பகையுங்காண
மிகுத்ததோர்துயரந்தன்னின் மிகயோகமுதிப்புங்கண்டு
உகத்தினடக்குக்கன்மம் வேதனுண்டாக்கிச்சொன்ன
விதத்தினிலுள்ளபேர்க்கு வின்பதாய்த்தெரிவிப்பேனே 5

நூலாரம்பம்.

பாலாரிஷ்டம்.

உதித்ததுவிரையமட்டி லொளிர்மதியரசன்கூடித்
திதித்தனினின்ருராகிற் பிரபலனுறுதியாகுங்
கதித்தவராறெட்டாகிற் கடினமாய்க்கண்டமுண்டு
விதித்ததியாண்டிரண்டில் விளையுயிமதீங்காய்மாதே 6

மந்தன்சேயிருவர்கூடி யிருந்திடிலதுவுந்தீது
அந்தெதிரிடமுமாகா தறிதியாய்த்தீங்குமுண்டு
உந்தவர்நான்குமூன்று மோரெட்டுபத்துநோக்க
அந்தமாயதைநிளைப்ப ராறிருமாதந்தன்னில் 7

வலமதிலரவங்காரி வந்திடிலதுவுந்தீது
குலமதிலீன்றசுற்றங் குடியதமாகக்செய்யும்
பலனதுசெய்யுந்தீது பன்னிரண்டாண்டிற்காணும்
சலமதுவாகத்துன்பஞ் சலிப்புடனிருப்பன்மாதே 8

கரும்பாப்புஞ்சனியுங்கூடக் கலந்துடனிரவிநிற்க
வரும்பாடுபிதிர்க்குத்தோஷம் வகைவங்கிஷத்தைக்கொல்லும்
திரும்பாதுதீதாய்நிற்குந் திங்களொன்பதனிற்கொல்லுங்
கரும்பூதமறைந்திட்டாப்போற் கலங்குவன்புவியின்மீதே 9

பூமனுமதியுங்கூடிப் புகுந்திடப்புந்திதானுஞ்
சோமனுக்கேழிற்காரி சோபித்துநின்ருனுகின்

மாமெனுமாதுர்வம்ச மடியுமேயிருமூன்றாண்டிற்
காமனுக்கினியமாதே கருத்திலார்க்குரைக்குங்காலே. 10

மாகனுஞ்சனியுங்கூடச் சூரியன்வந்துநிற்கப்
பொங்கமாயவர்க்கேயேழிற் புகுந்திடப்பூமனாரும்
அங்ஙனேவிவாகங்கூடி யோராண்டிற்றீங்குண்டாகும்
எங்குளமாதர்கட்கு மிவன்சோரபுருஷனாமே. 11

3911

மன்னவனிரவிகூடி மனைக்கேழிற்காரிசெவ்வாய்
நின்றிடிற்றீங்கேதென்னி னில்லாதுபுத்திரவம்சம்
அன்னதிர்சோமன்கூடி லவன்பிதாதாய்க்குமாகா
தென்றவர்சொன்னதீம்பி தேழிரண்டாண்டிற்றானே. 12

துலக்கமாய்வெள்ளிமூன்றிற் றோன்றியேயொருவர்பாரா
நலக்கமில்லாமனின்றா னாசமாங்குலமுந்தீதாய்க்
கலக்கமில்லாமனின்றாற் கருவற்றுமனையும்பாழாம்
விலக்கவுமொருவராலே விண்ணினில்லைமாதே. 13

இணக்கமாய்க்காரிசெவ்வா யிருவருங்கூடிநின்ற
அணைக்கந்தமனையுமேழு மம்பலமாகிநிற்கும்
வணக்கமுநன்மைசெய்யார் வருமதிற்றீங்கேயுண்டாம்
இணைக்கரிசெய்வர்கண்டா யீராறுமாதந்தன்னில். 14

மூணினிற்செவ்வாம்நிற்க மும்மூன்றிற்காரிசேரக்
காணாமையுடன்பிறப்புக் கடினமாய்க்கண்டமுண்டு
நாணியேபிதிர்க்குக்கண்ட நான்குதிங்களிலேகாணும்
வேணுமென்பகையோர்பார்க்கின் விளைவதைந்தாண்டிற்றீங்கே. 15

பத்தினிற்சனியுநிற்கப் பணிமதியீனமாக
ஒத்துநாலிரவிநிற்க வோரேழிற்பூமன்சேர
மற்றுளோராறெட்டாக மரணமாங்குழவிமாதா
அற்றவன்றிரவுதன்னி லாகாதுமனைக்குந்தோஷம். 16

உதித்தவராறிற்காரி யுடையவனீனமாக
எதிர்த்ததோரேழினின்ற விரவியும்பிலத்துநிற்கப்
பதிக்குருவுடனேபூமன் பற்றியேநின்றானாகிற்
பிதிர்க்கொருதீங்காய்ப்பெற்ற பிள்ளையுமரணமாண்டில். 17

ஐஞ்சுடனுயர்ந்தவீட்டி லம்புலிசனியுங்கூட
மிஞ்சியவிடத்திற்பூமன் வெங்கதிரிரவிநின்றாற்
கொஞ்சியபாட்டன்பாட்டி குலமுளோர்குழவிமாதா
வஞ்சியேமூன்றுமாத மடிவதுநிசந்தான்மாதே. 18

ஏழுடனிரண்டுவீட்டா னிருவருமத்தமிக்கத்
தாழ்வுடன்மதியுமாறிற் றலைவனுமுதயங்காரிச்
சூழிடம்பாம்புபின்சேய் சுங்கனுங்கூடிநின்றால்
வாழ்வுடன்குலேந்துவந்த குழவியுமரணமாண்டில். 19

எட்டினிலரசன்சேர விதற்கேழிற்சுங்கனிற்க
மட்டினிற்சோமன்மூன்றின் மனையவனீனமாக
எட்டினிலுதயங்காரி தொனிப்பவன்பூமன்கூட
விட்டிடுங்குழவிசீவன் விரையமாங்கொஞ்சநாளில். 20

இன்பமாய்லாபலாபத் தினியவரத்தமிக்கில்
ஒன்பதிற்சனியேநிற்க வொருநான்கிற்செவ்வாய்சேர
அன்பதாய்விரையம்லாப மரசனுஞ்சுங்கனீனந்
துன்பமாய்மதியுமாறாற் சொற்றனங்குழவிபோமே. 21

சிறந்தவன்மதியுமீனஞ் சீணமாயரசன்சுங்கன்
மறந்துடனிருந்தாராகின் மற்றதீக்கோளர்மேலாய்
இறந்துடன்போகச்செய்வ ரிக்குறிதப்பாமாதே
அறிந்துகொணினைவதாகி யவனியிலுதித்தபோக்கே. 22

உலகினிலுதித்தபேர்கட் கொளிர்மதியரசன்சுங்கன்
கலகமில்லாமனின்றாற் கண்டவன்மதிவீட்டானு
நிலமதிலுறவேயாகி னிச்சயநன்மையுண்டு
சலமதாய்த்தியர்தீங்காய்ச் சாகவுமொட்டார்மாதே. 23

ஒருசுபன்மிகுத்திருந்தா லொட்டார்கடீயர்சூழ்ந்து
இருசுபர்மிகுத்திருந்தா லிரெட்டாய்ப்பகைமேசெய்வர்
திருநலமானோர்நன்மை தீயருங்கிட்டார்தூரம்
பெருசுபர்நாலேயாகிற் பேர்சொலக்காணார்தீயர். 24

உதயாதிசுங்கன்ராச னொளிர்மதிபதியுநல்லோர்
இதமிலாப்பாபிமந்தனிரவிசே யெட்டோன்பாம்பும்

இதுவைந்துபேருமாகுமெழிற்புதன்சமனேயோகும்
இதிலாகுநன்மையெண்ணினிப்பலன்சொல்வாய்மாதே 25

உதித்ததற்கெட்டோன்காரி மதிக்கெட்டோன்பகையாய்நிற்க
மதித்ததந்தவிடத்தினின்ற மன்னரும்பகையேயாவர்
கதித்தவர்மேலாய்நின்றாற் கண்டமுந்தோஷமுண்டு
பதித்தடுமாறிநின்றாற் பாவமுமில்லைமாதே 26

இப்படியுறினட்பாட்சியுச்சமுமிழந்துபோகும்
பொயப்படவிருந்தபேர்கட்பொய்ப்பகைநீசமானால்
நற்படியாகிநின்றநலந்தரும்வகையேசெய்வர்
சொற்படிதப்பாதாகுந்தொல்புவியோர்க்குமாதே 27

புந்தியோரிவர்க்குநாலி லிருந்திடக்குற்றமுண்டு
அந்தெதிர்சோமனின்று லவனுக்கும்கயீனமுண்டு
வந்திந்தவடைவேயாகில் வருமதிதீமையாகும்
இந்திரும்பகையாற்சீவ னிறக்குமெட்டாண்டின்மாதே. 28

மதிநின்றவீட்டுக்காறின் மந்தனாரவங்கூட
விதியெட்டிலிரவிபூமன் வீற்யேநின்றாராகிற்
பதியெட்டுமாதந்தன்னிற் பறந்திடும்பிறந்தபிள்ளை
எதிரிட்டுநிறுத்தவல்லோ ரெவராலுமில்லைமாதே 29

சோமற்குமுன்னேகாரிபின்னுமோர்பூமனிற்க
ஆமவர்க்கெட்டிற்பாம்பு மலரியுநின்றாராகிற்
சாமதுகுழவிதானுஞ் சரியிருமாதந்தன்னிற்
போமதைநிறுத்தவல்லார் பூமியிலில்லைமாதே 30

மதியுதயத்துக்கெட்டின் மன்னவனொருவனிற்க
அதிவிரையத்திற்காரியரவமுமவர்க்கேயெழிற்
கதிருஞ்சேய்நின்றாராகிற் கண்டாறுமாதந்தன்னில்
விதிமுடிந்தோடிப்போமே விண்ணினிலுதித்தகாளை 31

சுந்திரனிருப்பிடத்திற் சூரியன்முன்னேநிற்க
சந்திரர்கெட்டிற்காரிசத்தமஞ்செவ்வாயசேர
இந்திரலாபஞ்சுங்க னிருந்திடனொருவனாகை
மந்திரியைந்திநின்றான மரணமாங்குழவிகாலில் 32

ஒருபிறையாகிநிற்க வொருநான்கிற்காரிசேர
இருமூன்றிலொன்றிற்செவ்வா யிருந்திடவரவங்கூட
மருமணராசன்சுங்கன் மதிக்கெட்டினின்றாராகில்
வருவதோர்குழவிதானு மாளுமன்றிரவின்மாதே 33

பிறைநின்லவிடத்திற்காரி பூமனுமைந்தினிற்க
அறையுமீரைந்துவீட்டி லரவமுமிரவிநிற்கக்
குறைவிலாச்சுங்கன்ராசன் கூடாமலாறெட்டாகின்
முறையிட்டிங்கெட்டுநாளின் முன்னிட்டுப்போமேபிள்ளை 34

பூரணவதியேயாதப் புந்தியுமேழினிற்கக்
காரணமானமந்தன்கடும்பப்துநாளிற்செவ்வாய்
ஏரணியிரவியாதிலிருந்திடவெட்டிற்பொன்னும்
வாரணிதனத்தினுளே வருமந்தக்குழவிசாமே 35

குறைமதிநின்றவீட்டுக் கொருபக்கங்குருவேநிற்க
அறியவர்க்கேழிற்காரி யரவமுங்கூடிநிற்க
நறியதோர்தனத்திற்செவ்வாய் நற்சுங்கனவர்க்கேயேழில்
நிறைமதியதற்கேழ்புந்தி யூழ்நிற்கிற்குழவிசாமே 36

அரவுடன்மதியுங்கூட வவர்க்குநால்சனிசேய்நிற்க
திரமுடன்சேய்க்கேழ்சுங்கன் றிருப்புந்திகூடிநிற்க
குருவுடனிரவியெட்டிற் கூடியேனின்றாராகில்
வருவதுதீங்காண்டெட்டின் மறிப்பவரில்லைமாதே 37

சனிமதியரவங்கூடச் சத்தமஞ்செவ்வாய்நிற்க
மணியதாமிரவிபுந்திமன்னவர்க்கெட்டாய்நிற்கிற்
பணிசுங்கன்சனிக்கெட்டாகிற் படிதனிற்பிறந்தபிள்ளை
இனியொருநாளுநில்லா திறந்திடுங்குழவிமாதே 38

மதியிருபிறையுமாக மன்னவன்பகையாய்நிற்க
விதியொருநீசமாக வெள்ளியுமத்தமிக்கப்
பதிமதியிடத்தான்காரி பக்கலிற்சேர்ந்தானுகில்
மதியறைக்குள்ளேமாண்டு மடிந்துடல்வீழுமாதே 39

னிறைகொண்டமதிக்கேமூன்றினின்றவனிரவிமைந்தன்
அறைகின்றவைந்திற்செவ்வாயதற்கேழிலிரவிநிற்க

முறைகொண்டுவெள்ளியாறின் முன்குருவிரையனின்ற
சிறைகொண்டமதியும்புந்தி சேர்ந்திடக்குழவிசாமே 40

அரவுடன்மதியுனிற்க வைந்தினிலலரிமைந்தன்
உரமுடனலத்திற்செவ்வா யொளிர்வெள்ளியாறினிற்கத்
திறமுடன்குருவுமெட்டிற்றிரும்பியேநின்றுனின்
முறையிட்டுப்பிறந்தபிள்ளை மூன்றிருமாதஞ்சாமே 41

சாவதுவேதோவென்னிற் சனிமதியுதயமீனம்
ஆவதுபகைமறிப்பு மத்தமுமாகிநின்றற்
போவதுமெய்தான்சீவன் பொல்லாதுபகையேயானல்
நாவதுதப்பாமாதே நாட்டுளோர்க்குரைக்கும்போதே 42

விதியற்றுப்போனபேர்க்கு மதியத்தைப்பார்த்துச்சொல்லு
மதியற்றுப்போனபேர்க்குச் சனியதைப்பார்த்துச்சொல்லு
சனியற்றுப்போனகாலை யுதயத்தைப்பார்த்துச்சொல்லு
சனிமதியுதயந்தப்பா பாதகப்படுமரணகாலம் 43

மதிக்கேபோலுதயத்திற்குஞ் சனிக்குமேயாய்ந்துபார்க்க
இதற்குமிவ்வண்ணமாய்ந்தா லேறியவிதியுந்தீது
விதிக்குறிதப்பாதாகு மேதினிதனிலுற்றோர்க்கு
பதிக்குறிமாதேகேளாய் பாரினிற்றப்பாவாறே 44

இதைவிடவேறேயில்லை யேதேதுபார்த்திட்டாலும்
அதையவர்நின்றதீங்கு மனைத்துமேமதியாலாய்ந்து
உதையமுஞ்சனிநின்றேருக் கொருவரைவீடுதாக்கிச்
சிதைபதஞ்சொல்லலாகுஞ் செகத்தினிலுதித்தபேர்க்கே 45

:பாலாரிட்டம் முற்றும் ஆநபாடல் 45

நன்று தீது.

கருதியகன்மங்கட்குக்காரிழைமாதேகேளும்
வருநலமதிதனக்கும் வகுத்தைந்துநான்குபேரைப்
பொருமதியுதயங்கண்டு பொல்லாதபேரைத்தள்ளிக்
குருமதிசுங்கனின்ற குறிநடுவாகச்சொல்லே 1

நல்லவர்நான்குபேர்க்கு நடுவதிற்சொல்லமேலாம்
பொல்லவர்க்கதுவேயானற் போய்விடுங்கருமங்கிட்டா

பின்னலங்கலந்துநின்று பிறிவினையில்லாதாகிற்
சொல்லுவர்மதியைப்பற்றித் தொனியுரைநடுவாய்மாதே 2

நட்டி.

நல்லதோர்பொருளைப்போக்கி நாடியேவருவோர்க்கெல்லாம்
வல்லதோரரவங்காரி யிரவிசேய்கேட்பானாகிற்
சொல்வதுவன்றேசேருந் தொனிப்பவர்கோணமானால்
அல்லதுமூம்மூன்றைந்தி லலறியேவருகுமாதே. 3

இப்படிநல்லோர்நின்ற விடத்தினிற்கேட்பானாகிற்
பொய்ப்படப்போனநட்டம் போய்வரன்மெதுவேயென்று
மெய்ப்படச்சொல்லலாகு மேலன்றிக்கோள்கனின்றாற்
சொற்படிவேதமூர்த்தி சொன்னசொற்றவறுமாதே 4

சதாமுகூர்த்தம்.

நினைத்திடுகருமங்கட்கு நிச்சயநாளேசோமன்
அணைத்தரோகணியாநாட் கொண்டைம்மூன்றுநாழிதள்ளி
இணைத்தொருநன்மைசெய்தா லிடையூறுவருவதில்லை
பணைத்தடிபருவதம்போற் பாரினிலிருக்குமாதே 5

ஐந்தொருநாட்குநாலா யமர்ந்தநாளதுவுஞ்சுத்தம்
மூந்தொருசொன்னநன்மை மூன்றிலொண்பலனையாகும்
இந்தநாளன்றிவேறு சுபமேற்கவேறேயில்லை
தொந்தமாங்கமலமாதே சொல்லுநியவனியோர்க்கே 6

இந்தநாளதற்குக்குற்றங் குருவிற்குச்சகடந்தள்ளி
எந்தநாளாகினன்மையிருக்குமேன்மேருவாகி
அந்தநாளதனினன்வை யாயிழைமோதகேளால்
இந்தொருநுறிதப்பாதே யிந்திரன்பதிபோல்வாழ்வன் 7

நன்றுதீது முற்றிற்று. ஆக 52

அற்பாயுள்.

உதயாதிசுபருங்கூடி யோரிடநிற்கத்தானு
மதியாகிப்பாபர்கூடி மற்றொருவிடத்தினிற்க
சிதையாமற்சுபரும்பாபர் சேர்ந்துடனின்றாராகில்
இதையாகித்தீங்குண்டாகி யிருப்பதாண்டிருபத்தைந்தே. 1

செனித்ததோருதயந்தன்னிற் சேர்ந்துநற்சுபருநிற்கக்
இனிக்குருவுடனேபாப ரிருந்திடவரவஞ்சுங்கன்
தனித்தொருசென்மத்தானுஞ் சனிக்கேழினின்றாராகில்
மதிக்கொருவீனமானான் மரணமாண்டிருபத்தைந்தே. 2

சென்மாதிசனியுங்கூடிச் சேர்ந்துடனேழினிற்க
கன்மாதிக்கெதிரோன்கூடிக் கலந்துடனிரவிநான்கில்
தன்மாதிதனத்தோன்சேர்ந்து தரைமகனுடனேகூடப்
பொன்மாதின்ரசேகேளாய் போய்விடுமீரெட்டாண்டில். 3

மன்னவனுதயந்தன்னின் மதியுடன்காரிநிற்க
அன்னரித்தானபூம னணிகியேயிரவிக்கேழில்
நின்றவர்சுங்கற்காறி னிலையதிற்பாம்பேயாகிற்
சொன்னதோரீராறாண்டிற் சோதனையாகப்போவன். 4

குறித்தலக்கினத்திற்காரி கூடியேமதியுநிற்க
வெறித்தங்கேயுதயத்தானும் வெள்ளியுமிரவியேழிற்
பரித்தலக்கினதிக்காறிற் பாம்புடன்குருவுநிற்க
நெறித்தவனொருபத்தாண்டு நிலையதிற்சாவுண்டாமே. 5

அறுமீராறுக்காறி லம்புலிசனியுநிற்க
வேறுபட்டுதயத்தானும் விடையும்பெண்ணிடமேசேர
மாறுமுக்கோணரீன மாயினான்மாதேகேளாய்
ஈறுபட்டுயிரேழாண்டி லிறப்பனென்றியம்பலாமே. 6

உதயத்திற்கேழில்வேந்த னுத்தமர்க்கெட்டிற்காரி
மதிபத்திலவர்க்கேழ்புந்தி மணிசுங்கனெட்டாய்நிற்கச்
சிதைவுற்றமதிக்கேயாறிற் றியருநின்றாராகில்
அதையொத்தகட்பானுவு மாறைந்தாமாண்டிற்சாவே. 7

ஒன்பதுபேருநின்ற நிலையதற்கொருவரெட்டாய்
இன்பமற்றிருந்தாராகி லிவனுமோராண்டிற்சாவன்

அன்பதாய்மதிக்கெட்டாகிற் சனியைந்தாமாண்டிற்சாவன்
தன்பதிசுங்கற்கெட்டிற் றரைமகனிருந்தாற்சாவே. 8

மதிக்கெட்டின்மந்தனிற்க மன்னவன்பூமற்கெட்டாய்
விதிக்கெட்டில்வெள்ளிநிற்க விடையுமேயிரவிக்கெட்டில்
உதிக்கெட்டிற்புந்திக்கேழி லொருவனுய்ச்சோமனிற்கக்
கதித்தெட்டுவருடந்தன்னிற் கண்டிடுமாதேசாவே. 9

சூரியர்க்கெட்டிற்சோமன் சுன்னுதயத்துக்கெட்டில்
வீரியர்க்கெட்டில்வேந்தன் விடைக்கேழிலுதயனிற்கக்
காரியர்க்கெட்டாய்ச்சுங்கன் கடுமதிக்கேழிற்பூமன்
பாரிவைநின்ருராகிற் பத்தரைவருடஞ்சாவன். 10

பூமனுர்மந்தன்வீட்டான் புகுந்திடவுதயந்தன்னிற்
காமனுரிருந்தவீட்டான் காரியுங்கலந்தேநிற்க
சோமனுரிரவிகூடிச் சொன்னதிலுதயனிற்க
ஆமதிறகெட்டிற்பொன்சே யாண்டிரண்டதனிற்சாவே. 11

அற்பாயுள்-முற்றும்-ஆக-செயயுள்-63.

யோகம்

குருசொல்லியது

இராசயோகம்.

இசைந்ததோருதயந்தன்னி லிருப்பவரினியோர்சோமன்
உசந்தொருகுருவுமேழி லொருவனுய்நிற்கத்தானும்
அசைந்தொருபாம்புஞ்சுங்கன் வருமேபத்தினிற்கக்
கசந்தவர்நவத்திநின்ருற் கருகிரிராசயோகம். 1

தஞ்சமாயுதயோன்கூடச் சந்திரனிடத்தான்சேரக்
கொஞ்சியேசுங்கனேழிற் கோலமாய்நின்ருனுகின்
மிஞ்சியேகுருவும்பாம்பு மிகைத்துடன்பத்தினிற்க
வஞ்சனையோரும்பாக்கியம் வந்திடிலிராசயோகம். 2

நேசமாயரசனின்ற நிலையதேயுதயமாகிப்
பாசமாய்மதியமேழிற் பதியவன்சுங்கன்கூட
ஆசையாய்ப்பத்தினின்ரு லாபனுமதிமேலேசேரத்
தேசமாய்ப்பாவர்கோணஞ் சேர்ந்திடிலிராசயோகம். 3

ஒத்தவனுதயன்சுங்க னொருமையாயுதயந்தன்னின்
மத்தமன்மதிதன்வீட்டான் மகிழ்ந்துடனேழினிற்க
எத்துடன்குருவும்பாம்பு மிருவரும்பத்தினிற்க
கத்தவன்பாபரீராறுயினு மிராசயோகம். 4

உதயாதிசுங்கன்பத்திலொருமையாயிருக்கத்தானுஞ்
சிதையாமன்மதியுநாலிற் சேர்ந்துடன்குருவும்பாம்பும்
பதியாகவேழிற்சேரப் பாபரும்லாபநிற்க
இதையாகநின்றாராகி லிவனுக்கேயிராசயோகம் 5

அந்தமாயுதயத்தோனு மரசனுநாலினிற்கத்
தொந்தமாய்மதியினுலேசுகமதில்லாமற்பத்திற்
சொந்தமாய்ச்சுங்கனேழிற் சுகமுடன்பாம்புங்கூட
அந்தமாய்ப்பாபரீரா றிருக்கினுமிராசயோகம் 6

நன்றுளவுதயத்தானு நன்மதிசுங்கனுலில்
அன்றுளமதியும்வீட்டா னரசனும்விடையுமேழில்
என்றுளவிரவிமூன்றிலிருந்திடச்சனிசேய்லாபம்
ஒன்றுலகாளும்ராச யோகமேயுண்டுமாதே 7

சந்திரலக்கினுதி தனிவிடையரசனுலிற்
சுந்தரவுதயத்தானுஞ் சோகமில்லாமற்பத்தில்
வந்தரசானேனேழில் வருமதியுதயநிற்க
இந்தவர்பாபர்லாப மிருந்திடிலிராசயோகம் 8

சொன்னதியுதயத்தானுஞ் சுங்கனுமரவம்பத்தில்
நின்றதில்வேந்தன்சோம னிலேயேழினிற்கத்தானு
நன்னதிற்காரிசெவ்வா யிலாபத்திற்புந்திவேந்தன்
பன்னதாயிருந்தாராகில் பாராளுமிராசயோகம் 9

குருமதியுதயத்தானுங் கூடியேபத்தினிற்க
மதிபதிசுகங்கன்றானு மகிழ்ந்துடனுதயநிற்கத்
தருமதிற்பாம்புநாலிற் றரும்புந்தியிரவிசேர
இருமூன்றிற்செவ்வாய்காரி யிருந்திடிலிராசயோகம் 10

அரவுமேயிருந்தவீட்டா னம்புலிகேழினிற்கத்
திரமுடன்சென்மவாதி சேர்ந்துடன்குருவும்பாம்பும்
மரபுள்ளசுங்கன்பத்தின் மகிழ்ந்துடனிருந்தாராகில்
குறைவிலாவிராசயோகங் கொடுங்கணைவிழியினாளே 11

ந ர யோ க ம்

வேறு.

சென்மாதிபனும் பெருமதியுஞ்
சேர்ந்தேயொருவர்க் கொருநான்கிற்
கன்மாதிபனும் பின்னிடத்தார்
கலந்தேயரவத் துடன்சேரப்
பொன்மாநகருக் கதிபதியும்
பொன்னே யிரண்டாகியுநின்றாற்
பெண்மானரசே நரயோகம்
பெரியோருரைத்த டிசொல்லே 12

சொல்லேசுங்கன் றணித்திருக்கச்
சோதிமதியு மரவமுடன்
நல்லோரஞ்சி னயந்திருக்க
நலமாய்ப்பதினொன் றதிற்குருவும்
பொல்லார்கூடி யிருந்தாலும்
போகாதிவர்வாகனயோகம்
கல்லார்மதியின் கனங்குழலே
காணாதவர்க்கிங்கு ரைசெய்வாய். 13

வேறு.

அரவுடன்கூடச்சேர்மன் குருபதினொன்றினிற்க
விரகுடன்சுங்கன்வாக்கில் வெய்யவன்பஞ்சங்காக்க
மரபுடைலக்கினாதி மனமகிழ்ந்திருகக்கூட
விரைசெறிகுழலாய்கேளாய் வேண்டியசிவிகையேறும். 14

பாம்பொக்கப்பக்கமூன்றிற் பரவியேசுபர்கணிற்க
வேம்பொக்கச்சனிசெய்வாய்தான் வீரியவிலாபஞ்சேரக்
காம்பொக்குமுலையினாளே சுருதியேநிற்பாராகில்
ஆம்பொக்கநரயோகந்தா னறிந்துரையவனியோர்க்கே. 15

குருசுங்கனிருந்தவீட்டான் கூடியேயரவஞ்சேர
அரவுச்சங்கதிரோனட்பி லாறினின்மூன்றினிற்கப்

வேறு.

பருமுச்சங்கதனுப்பொன்னும் பாம்புக்குநாலாய்நிற்க
மருவுச்சங்குழலாய்கேளாய் மருவிலாந்தோளியுண்டே. 16

அரவோடரவமதின்வீட்டா னமர்ந்தேயொருவர்க்கொருநான்கில்
உரவாயரசனீரிரண்டி லொளிசேர்வெள்ளியிருந்தாலும்
பரவாயுயர்ந்தசந்திரனும்பாம்பு மதற்குச்சதுரத்தே
உரவாயிருந்தாலெந்நாளு மொழியாதவர்க்கு நரயோகம். 17

சீவாதிபனுஞ்சென்மமுடன் சேர்ந்தேயரனுர்க்கேழாகில்
ஈவாருடன்சேர்ந்திடப்பாம்பு மேழைமதியுமீரிரண்டிற்
பாவாய்பாகமிடமறிந்து பற்றியிருந்தாற்சுங்கனுமோ
ஆவாதொருகாலமுமில்லை யறையாயவர்க்குநரயோகம். 18

பேரியோகம்

வேறு.

சென்மாதிக்கிருபான்மூன்றிற் சேரவேசுங்கன்பொன்னுங்
கன்மாதிபின்னேனேழிற் கலந்துடனிருப்பாராகிற்
பொன்னுன்கிலரவஞ்சேர்ந்து போதவேயிருக்கத்தானும்
பின்சாய்ந்தகுழலினுளே பேரியங்கிசமுண்டாமே. 19

ஏகச்சக்கிராதிபன்

மதிக்காறிற்புந்திநிற்க மற்றபொன்னேழிற்சேர
விதிக்காறிற்சுங்கனிற்க வீரியவிராகுதானும்
பதிக்காறினுலினல்ல பஞ்சமன்மின்னேன்சேர
எதிர்த்தாடலெவருமில்லா வேகபூபாலனுமே. 20

வேறு.

அரவுஞ்சுங்கன்மதியரச னமர்ந்தவீட்டானொருநான்காய
உரவாயிவர்க்குமேழன்றி யொருபத்தாகவிருந்தாலும்
குருவுமதியுங்கூடவதற் கொருபத்தாகவிடைசுங்கன்
இரவும்பகலுமொருகுடைக்கீழேகசக்கிரவர்த்தியுமாம்

வேறு.

குருவுக்கைந்திடத்தேசுங்கன் கோலமானவத்திற்சேர
இரவுக்குப்பகையோன்வீட்டா னிவருடன்கூடிநிற்க
அரவுக்குச்சோமன்வீட்டா னவனுமேயீரிரண்டேல்
மருவொக்குங்குழலினளே மணிமுடியிராசயோகம். 22

வருவதுயோகந்தானும் வளர்பிறையுச்சமாகிற்
குருவதுகடகந்தன்னிற் கூடிலக்கினத்தானத்துக்
கரமதுபத்தினிற்க வவ்வெள்ளியுச்சமாகில்
இருபதுகடகத்தானை யேறியேயரசேயாள்வன் 23

வேறு.

சீவாதிபனுமரவமுமே சோந்தேயரசனுலாகிற்
பாவாதிபனுநிறைமதியும்பத்தே சங்கன்கலந்திருக்க
ஆவாவிடையினவ்வீட்டா னம்புலிநின்றவதிபதியும்
ஈவாரொருவர்க்கொருநான்கி லிருந்தாலரசேயாளுவனே 24

வேறு.

சதிரெதிர்வீட்டானைந்திற் சரசமாய்முன்பின்னேரும்
அதிர்தருமிலக்கினத்தே யவருமேநிற்பாராகில்
எதிரவேயிலக்கினத்தா னிருவருந்தர்மஞ்சேர
மதுரமாய்நிலவும்பாம்புஞ் சதிரசேமயாகில்ராசன் 25

யோகமுண்டென்றுசொல்க வொருநான்குமைந்துஞ்சேர
ஆகமுமூன்றுமுன்னே னவருமேசேர்ந்திருக்க
நாகமுமிருந்தவீட்டா னடுப்பதிநாலாய்நிற்க
ஏகமாய்ச்சுங்கன்சென்மத் தாதியுங்கூடில்ராசன் 26

கண்டுசொல்யோகந்தன்னைக் கருத்திலாறியவேண்டி
விண்டுநல்லரசன்சோமன் வீறியேசுங்கன்பாம்பும்
அண்டிடிலிருரெண்டாகி லவரவரிடந்தானுலாய்
வண்டுநேர்விழியாய்கேளாய் வருவதுயோகந்தானே. 27

அப்புலியிருந்தவீட்டா னரசற்கோரேழினிற்க
வெம்புலிசுங்கனூரான் வீறியேசோமற்கேழில்
நப்புலிபாம்பிடத்தா னயந்துடனவர்க்கேபத்திற்
செம்புலியாகநின்றாற் செகசக்கிரவர்த்தியாமே 28

ஒன்பதுபேருநட்பி லொருவருக்கொருவர்நாலாய்
இன்பமாயிருந்தாராகி லிரவிவாளிபகலாய்நின்ற
அன்பம்தாடாறுதேச மகன்றசாம்பிராச்சியயோகம்
என்பதுநாலாயொள்றி லிருந்தரசாகும்யோகம் 29

இடைசிறுமுகமுநல்ல வேந்திழையாளேகேளாய்
குடையுடன்குஞ்சம்வீசு மியோகமேகூறவேண்டில்
படைமன்னனரசன்சுங்கன் மதிபுந்தியினிமியார்கூட
விடையளின்னிடத்தா ரீரெண்டாயினுமிராசயோகம் 30

கெஜயோகம்.

அரசனுமிலக்கினத்தா னரவுமேயீரண்டாய்ப்
பரிசமாயிருக்கநல்ல பாக்கியவானுங்கூட
விரசமாய்மதிக்குநாலில் வீறியேசுங்கனிற்க
அரசியங்குழலேகேளா யாயிரம்யானைகட்டும் 31

சாம்பிராச்சிய யோகம்.

அரசனுரிருந்தவீட்டா னம்புலிக்கேழினிற்க
விரசமாமதிதனுாரான் வீறியேவெள்ளிக்கேழில்
வரிசையாயரவுநின்ற வதிபதியவர்க்குநாலிற்
சரசமாயிருந்தாராகிற் சாம்பிராச்சியயோககாமே 32

யோகமுற்றும் ஆக பாடல் 95

பலாபலன்.

உறவு பகை சமன்.

வேறு.

இரவிசனிசெவ்வாய்தானு மிவர்மூன்றும்பெரும்பாவி
அரவுமதிராசன்வீட்டா ராயிடிற்சுபரேயாவர்
வரவுதிசனிசேய்வீட்டா ராயிடிற்சுபரும்பாபர்
உரவறிந்துரைக்கலாகு முபமதுகேளுமாதே 1

உதயமேழ்நான்குபத்து மவர்க்குறவுள்ளோர்கோணர்
மதியமுஞ்சதிரத்தாரும் பதியகோணர்க்குநட்பு
விதியதாறீராறெட்டின் வீறியேயிவர்க்குப்பொல்லார்
பதியதாங்குறிதான்கோளாய் பகைநட்புமறியும்வாறே 2

ஆறுமீராறமெட்டோர் கோணமேசமனேயாவர்
வீறியசெவ்வாய்காரி விளங்குமான்கதிரோன்கூட
ஏறியகோணஞ்சேர விவர்சகுமேசமனேயாவர்
கூரியகண்ணுய்கேளாய் குறியதாய்ச்சமனேசொல்லும் 3

பலன்சொல்லும விபரம்.

பத்தெழுமுதயநாலு பேருக்கும்பகைவர்கேளாய்
ஒத்தெழுமாறுமெட்டு மொருபன்னிரண்டுமாக
கத்தெழிலொன்றுபோகக் கருத்துளோர்சொன்னநூலை
வித்தெழுகமலமாதே விளம்பிடாய்விளங்கத்தானே 4

அரவிருந்திடும்வீட்டார்க்கு மம்புவியிரவிக்காகார்
இரவியிற்றிருந்தவீட்டா ரிவருமேயரவுக்காகார்
உரவன்றிப்பார்க்கலாகா வுபமதுவறியாதார்க்கு
விரைசெறிகுழலினுளே விளம்பிடாயவனியோர்க்கே. 5

பலாபலன் முற்றிற்று.

ஆக செய்யுள் 100

பூரணாயுள்.

மந்தனாரிருந்தவீட்டான் மறைப்பிலாச்சுபரேசேரில்
தொந்தமாயெட்டோனட்பிற் சுகமுடனிருந்தாராகில்
அந்தமாயாதிக்காறி லவனுக்குமுன்பின்னோரும்
வந்தநாளுறவேயாகில் வயதுமேநூறதாகும். 1

அட்டமவிடத்திற்பாப ரன்றியேசுபர்கணிற்க
துட்டமாங்காரிநட்பிற் சுகமுடனிருந்தானாகிற்
சட்டமாயிரண்டோனின்ற சனிவீட்டான்சமனாய்நாலில்
இட்டமாயிருந்தானாகி லிவனுக்கேவயதுநூறு. 2

சனிக்கிருபக்கமாறிற் சலிப்பிலாச்சுபர்கணிற்க
விதிக்கொருவாட்சிநட்பாய் வீறியேயிருக்கத்தானும்
பதிக்குருகாலாய்நின்றாற் பரமனார்லிபியேநூறு
அதிற்குறையாமனிற்கு மம்புலிக்கதிகமாதே. 3

விதிக்கோரீராறிலெட்டில் வெள்ளிபொன்றிங்கணிற்கச்
சனிக்காறினட்போர்நிற்கச் சமனாகச்சனிவீட்டானும்
அதற்காகநாலிற்பொன்னு மமர்ந்திருந்தெட்டோன்கூட
மதிக்கிணைமாதேகேளாய் வயதுமேநூறதாகும். 4

எட்டாறுபனிரண்டோனு மிவருமேயொருநான்காகத்
தொட்டாறுபனிசண்டெட்டோர் சுபமுடன்சேர்ந்திருக்க
நட்டாறிற்காரிநிற்க நலமுளோர்பார்வையாகிப்
பெட்டாறுமூன்றுமொன்றிற் பூமியிலிருப்பன்மாதே. 5

காரிக்குமீராறெட்டிற் கனகநற்சுங்கன்புந்தி
சேரிக்கையாகிநின்றாற் சென்மமாதிக்குநாலாய்க்
கோரிக்கையாகவெட்டோன் கூடவேமதியுஞ்சேரப்
பாரிக்கமொன்றாய்நூறு வயததாய்நிற்குமாதே. 6

எட்டுடனாட்சிநட்பு மிருந்துடனுச்சமாகில்
நட்டுடன்காரியுச்ச நட்புடனாட்சிசேரக்
கட்டுடனல்லோர்பார்க்கக் காரியிலிரவியன்றித்
தொட்டிடாதிருக்கின்மாதே தோன்றியவயதுநூறே. 7

எட்டிருபக்கநல்லோ ரிருந்திடக்காரிநட்பில்
தொட்டுமுன்பின்னோர்நட்பாய்ச் சுபருமேயிருந்தாராகிற்
கட்டுடனெட்டுவீட்டான் கனகநற்சுங்கன்சேர
மட்டிலாதிருப்பன்மாதே வயதுமேநூறதாகும். 8

எட்டுடனெட்டுவீட்டா னினியவராட்சியாகின்
மட்டுடன்பாபர்பாரா ராயினுஞ்சுபரேபார்க்கக்
கட்டுடனுதயந்தன்னிற் கனகநற்சுங்கனிற்க
விட்டிடர்திருக்கினூறு வயததாயிருப்பன்மாதே. 9

எட்டவனிரண்டினிற்க வேழுடனுதயஞ்சேரத்
தொட்டவன்றர்மமூன்றிற் றோன்றியேபாபர்பாரா
விட்டவனரசன்பத்தில் வீறியேநின்றானாகில்
இட்டவனாகிவாழ்வ னிவனுக்கேவயதுநூறு. 10

ஆறெட்டுக்குடையோர்சேர்ந்திட்ட வவ்விரையத்தினிற்க
மாறெட்டுவிரையத்தானு மறத்துமாறெட்டினிற்கக்
கூறெட்டுமுதயந்தன்னிற் குருவாகிச்சுங்கனிற்க
ஏறிட்டுவயதுநூறு யிருப்பனேபுவியின்மாதே. 11

சோமனார்பெருமையாகிச் சோதிசேர்வெள்ளிக்கேழிற்
காமனாரரசனுலிற் காரியுநின்றானாகிற்
பாபமனாரிரவிசேயும் பாம்புமேபாராராகில்
ஏமனாரழைத்திட்டாலு மிருப்பனேவயதுநூறு. 12

உதயத்திற்சுபரேநிற்க வொருபகையாரும்பாரா
மதியத்தினல்லோரன்றி மற்றபரிருக்கலாகா
அதையத்திற்சுபரேகூடி யம்புலிபெருமையாகில்
விதியற்றப்போகாதாகி மேதினியிருப்ப னூறாய். 13

உதயாதிபதியுநட்பா யாட்சியுமுச்சமாகில்
மதியாகிலாட்சியுச்ச நட்புடன்பெருமையாகில்
இதையாதிபாபர்பாரா ரென்னினுஞ்சுபரேபார்க்கச்
சிதையாமனூறதாகிச் சிறியதோர்மாதேநிற்கும். 14

சதிரெதிரேழுக்கேழார் சமர்த்தராய்க்கோணஞ்சேரச்
சதிரெதிர்வீட்டோனட்பாய்ச் சரசமாய்நிற்கத்தானும்
எதிரதிற்குருவேநிற்க விந்துநட்புச்சமாகிற்
கதிரவன்போலவாகிக் கணக்கவேவயதுநூறு. 15

தோணியவிலக்கினத்தான் சோவனாிருந்தவீட்டான்
பேணியவெட்டோன்காரி பிறிவினையில்லாதாகிக்
காணியேசுங்கன்புந்தி கனகநல்லரசன்சேரப்
பூணியேவிதியுயர்ந்து பூமியிலிருப்பன்மாதே. 16

சனியுடன்பாபர்கூடித் தானுமேயாறெட்டாகில்
விதியுமேயாட்சிநட்பாய் வீரியசுபரேபார்க்க
பதிமதியரசன்சேரப் பாங்குடன்சுங்கனிற்கில்
அதிபதியாகிநிற்ப னவனுக்கேவயதுநூறே. 17

உற்பதியாதிநன்று யுதயாதிபதிக்குநட்பாய்
நற்பதிசேர்ந்துநிற்க ஞாயிறுபாராதாகிச்
சற்பதிகாரிசெவ்வாய் சரசமாய்க்கோணஞ்சேர
நிற்பதுவய்துநூறு நினைவதாயுரைப்பர்மாதே. 18

மதிபதியதற்குநாலின் மன்னவன்புந்திசுங்கன்
அதிபதியதற்குப்பத்தி லவரிருந்திடவேநோக்க
விதிபதியிரவிகாரி வீரியசெவ்வாய்தானும்
மதிபதிகோணநின்றால் விதியதுநூறதாமே. 19

பூரணாயுள் - முற்றும்

ஆக-பாடல்–119.

இ ரா ச யோ க ம்.

சத்தமவிடத்தான்றானுஞ் சதிரெதிர்பதியார்கூடி
உத்தமபாக்கியத்தி லுடையவன்கூடச்சேர
அத்தமமில்லாதாகி யைந்துளோன்சன்மஞ்சேர
உத்தமசீவனோந்தி லிருந்திடிலிராசயோகம். 1

ஏழிடமுதயமெட்டி லிருக்கவேயெட்டிற்பின்னேன்
வாழ்வுடனணியாய்நிற்க வருமந்தராசயோகம்;
ஆழியுந்தீவுமெல்லா மவனதாயரசேயாள்வன்
தோழிநற்கமலமாதே சொல்லிதையவனியோர்க்கே. 2

கதிர்ப்பஞ்சத்தானுங்கூடிச் சத்தமஞ்சேர்ந்திருக்க
அதற்கெதிர்பதியேசேர்வுற் றேழிரண்டதனினிற்க
அதிர்நவத்திடத்தானாரி லன்றியேலக்கினஞ்சேர
மதுரமாய்ச்சீவலாபஞ் சேர்ந்திடிலிராசயோகம். 3

மதிபதியரசன்மூன்னேர் பக்கமாய்ச்சுங்கனிற்க
விதிபதியாட்சிநட்பு வேண்டியே நிற்குமாகில்
அதிபதியரசற்கேழி லவனிருந்திடநேர்நோக்கச்
சதிபதிமாதேகேளுந் தாழ்விலாதரசேயாள்வன். 4

உதயமெய்யினியவாளு மொன்றியேநடுவாய்நிற்கக்
கதிர்காரிசெவ்வாய்தானுங் கனத்தவீராறிற்சேரக்
கதிரொளியெங்குந்தீபங் கனமொக்கச்சேஷணுகி
மதிதவழ்கயிலைகாத்த வண்மைபோலிருப்பன்மாதே. 5

அரவுடனிருந்தவீட்டா னுறிரண்டதனிலில்லாத்
திரமுடனுலிற்பத்திற் சேய்காரியிரவியன்றிக்
காமுடனரசன்சோமன் கடுவெள்ளியிருக்கக்கூட
உரமுடனிலக்கினத்தா னுடற்பதிசேர்ந்தால்யோகம். 6

பறித்தலக்கினுதியாதிப் பாக்கியவிடத்துக்கிப்பாற்
குறித்தைந்துநாலும்பருங் குறைவிலாதணியாய்நிற்க
நெறித்துலோகாதியெல்லா நிலையதாயரசேயாள்வன்
வெறித்தகாமத்திளுளே விண்ணுளோர்க்குரையுமாதே. 7

பத்துடன்முன்னும்பின்னும் பருமதிசுங்கன்புந்தி
இத்துடனரவஞ்சேர் வுற்றிருக்கவேயிரவியன்றி
ஒத்துடனுதயந்தன்னி லுதயாதிகுருவுநின்முற்
கத்துடன்பெருமையாகிக் கனக்கவேயரசேயாள்வன். 8

நாலுகேந்திரத்தாராட்சி நல்லுச்சமாகிநிற்கக்
கோலெதிர்நவத்தார்கூடிக் கொடும்பகையாருமின்றி
மேலுகந்திடவேசோமன் மேருவினின்றானாகில்
ஆலுகந்தமர்ந்தமாதே யரசாளுமிராகயோகம் 9

பத்துடன்பத்துவீட்டிற் பதினைந்துபேருநிற்க
ஒத்துடனான்குபேரு முடுப்பதிசேர்ந்துநிற்க
எத்துடன்சிங்கம்போலே யிருப்பானேயரசேயாண்டு
வித்துடன்கமலமாதே விளம்பிடாயுலகுளோர்க்கே 10

ஏழுடனேழுவீட்டா னிருந்தைந்துபேருநிற்கத்
தாழுடனிருந்தபேருந் தனியராய்க்கூடிலாபம்
வாழ்வுடனிருந்தாராகில் வருமந்தராசயோகம்
வீழிடாதரசேயாண்டு விண்ணினிலிருப்பன்மாதே 11

வாசத்திற்பதியுமூன்று பேருமாய்க்கூடிநிற்க
நாகத்திற்சேர்ந்துநான்கு பேருமாயுதயஞ்சேர
யோகத்திற்றாழ்வில்லாம லொளிகண்டதூரமெல்லாம்
போகத்திற்சமர்த்தனாகிப் பொருந்தியேயரசேயாள்வன் 12

நாகமன்னிடத்தார்சேர்ந்து நற்பதிலாபஞ்சேரக்
காகமன்னிரவிசேய்க்குக் கனத்தவீராறினிற்க
வாகமன்னிடத்தான்சோமன் வந்தநாளதனினிற்க
யோகமன்சோமன்வீட்டானுதயத்திலிருக்கில்ராசன் 13

ஐஞ்சுடனைந்துவீட்டி லதிபதிநான்குபேருக்
கொஞ்சியேகூடிநிற்கக் கோலமாய்மற்றோர்லாபம்
மிஞ்சியேயிருந்தாராகின் மிருகத்தின்மேடைமீதில்
வஞ்சியேயரசனாகி வையகமெங்குங்காப்பன் 14

ஜெகச்சக்கிராதிபன்

நாலுகோளுச்சமாகி நகருளோராட்சியாக
மாலுளகேந்திரத்தின் மறுத்தங்கேயொருநாள்காக
ஏலுடனின்றாகி லிவனுக்கேராசயோகம்
சேலுடன்செங்கோலாள்வன் செகசக்கிரவர்த்தியாமே 15

காரிமதிசுங்கன்றாசன் கனக்கவேயுச்சமாகிற்
கோருமிராகுக்குநான்காய்க் கோணமாய்நின்றாராகிற்

பாரியோர்சதனூருகப் பரிமளிக்கமுதயோகம்
ஆருமோரெதிரில்லாம லரசதாயாள்வன்மன்னன் 16

ஆதித்தன்சுங்கன்காரி யமர்ந்தொருசெவ்வாயுச்சம்
வேதத்தனரவஞ்சேர்ந்து விண்மதிபதிக்குநான்கிற்
சோதித்துநின்றாராகிற் சொல்லுவனமுர்தயோகம்
நாதித்துமுழங்கத்தானே நாடெலாமரசேயான்வன் 17

சந்திரலக்கினதி சரசமாயுச்சமாகி
மந்தெதிரேழினின்று வளர்பாம்புநான்காய்நிற்க
தந்திராசன்ட்பாய்த் தனிப்புதனுதயநின்றாற்
கொந்தலர்குழலினாலே குவலயமெங்குமாளவன் 18

மதியிருந்துறும்வீட்டானு மகிழ்ந்துடனுதயஞ்சேரப்
பதியவன்மதியுங்கூடிப் பத்திலினிற்கத்தானும்
அதிற்கதியரசனேழி லமர்ந்துடனிருந்தாராகிற்
பதிலிதமாதேகேளும் பாராளுமிராசயோகம் 19

அரசனார்பிலத்துநிற்க வம்புலிபெருமையாகிச்
சரசமாய்ச்சுங்கன்புந்தி சலிப்பிலாவரவங்கூட
அரசமாயிலக்கினதி யாதிசென்மாதிநட்பாய்
உரசதிர்நின்றாராகி லோங்கிடுமிராசயோகம் 20

சுந்தரம்வியாழம்புந்தி சுக்கிரனிருக்கில்வீட்டார்
வந்தெதிராவத்தோடே வரும்லக்கினதிகூடச்
சந்திரவிலக்கினதி சதுரமாய்நின்றாராகில்
உந்தரசாளுமியோக முண்டென்றுசொல்லுமாதே 21

பகையோராட்சிநட்பாகப் பருமதியரவஞ்சதிராக
மிகையோர்குருபுதற்கேழாக மீன்வெள்ளிமதிக்கேயெதிராகப்
புகையோரிவர்க்கிங்கிடமாகப் புண்ணியரிதற்குவலமாக
இகையோரிப்படிநலமாக விருந்தால்வருமேயரசாள 22

இராஜயோகம் முற்றிற்று.

ஆக செய்யுள் 141

யோகபங்க ஜாதகம்.

இந்தொருகுறிப்பிற்பாப ரிருந்திடவத்தமிக்க
வந்தெதிரீராறெட்டோன் வலதிடத்திருந்தாராகின்
முந்தொருசொன்னயோக முற்பாதியாகிநிற்கும்
கொந்தலர்குழலினாளே குறியிதுசொல்லுமாதே 1

சென்மாதிதனக்குநாலிற் சேர்ந்திடக்காரிசெவ்வாய்
தன்மாதிதனத்தோனெட்டிற் றனித்தாறிற்குருவேனிற்க
கன்மாதிபதியுஞ்சேர்ந்து கனத்தவீராறிற்சேர்ந்தாற்
பொன்மாதின்மாதேகேளும் புகழிலாத்தரித்திரயோகம் 2

யோகமேயில்லைகேளு மொருநான்கிற்சனிசெவ்வாயும்
நாகமேயிதற்குநாலி னடுவெதிரிரவினிற்க
வேகமேலக்கினாதி வெண்மதிக்கெட்டோன்கூடிற்
சாகவேநினைவதாகிச் சலிப்புடனிருப்பன்மாதே 3

சந்திரலக்கினாதி தனியராயிரவிகூட
வந்தெதிருதயத்தானும் வருமதிற்சனியும்பாம்பும்
அந்தொருநடுவேராச னவர்க்கேழிற்சுங்கன்செவ்வாய்
இந்தொருவிதமாய்நின்றா லிவனுக்கேயோகமில்லை 4

பாம்புடனினியவர்க்கும் பத்தினிற்சுபரில்லாமய்
ஆமிடத்ததனிற்றீய ரவரிருந்திடவேசேர
சோம்புடன்லக்கினத்திற் சூரியனின்றானாகிற்
காம்பிளமுலையினாளே காணாதுயோகந்தாயே 5

யோகமேயில்லைகேளு முதயாதிசனிசெவ்வாய்க்கு
ந: கமேபனிரண்டாகி நற்குருசோமனெட்டிற்
வேகமேசோமன்புந்தி லெந்தற்குப்பனிரண்டாகிற்
சோகமேயடைந்துநிற்பன் சொல்புவியோர்க்குமாதே 6

உதயத்திலாறெட்டோனு மொருபத்திலிரவிசுங்கன்
அதையத்திற்கேழிற்காரி யம்புலியரவுனிற்க

சிதைவுற்றசென்மத்தாதி சேர்ந்துசேய்குருவுமெட்டிற்
கிதையொத்தயோகமாகிற் கிடப்பனேபுவியின்மாதே 7

எட்டவனுதயஞ்சேர விருப்பவனெட்டினிற்க
மட்டவன்லாபஞ்சேர மன்னவன்விரையஞ்சேச
தொட்டவன்றர்மனுறிற் றுனிப்பவன்றர்மஞ்சேர
விட்டவன்போலேனின்று விண்ணினிலிருப்பன்மாதே 8

நற்படிமன்னர்தானு நலமிலாராறெட்டாகப்
பொற்படுதீயரெல்லாம் பொருந்தியேசதுரமாகிற்
கற்படிபோலேனின்று கலங்குவார்புவியின்மாதே
இப்படியிருந்தாலியோக மெடுததுடன்போமென்சொல்லாய் 9

வேறு.

ஈறெட்டானோர்சதுரத்தி லிருநான்குதயமேழோனு
மாறெட்டாகவீராறின் மறுத்துனின்றூராமாகில்
ஆறெட்டாகவதற்கேழி லமர்ந்தகோணத்தவ்வீட்டார்
சீறூட்டாகவிருந்தாலுஞ் சிதையுஞ்செல்வந்தரித்திரமே 10

வேறு.

ஆய்ந்தொருமிரண்டுவீட்டி லணிகியேசுபர்கணிற்க
ஓய்ந்தொருகேந்திரகோண மோங்கியேபாபர்சேர
மாய்ந்தருமதியுமீனமாயினன் மாதேகேளும்
பாய்ந்தரும்பாக்கியமில்லை பரதேசியாகினிற்பன் 11

வந்தொருவுதயந்தன்னில் வலமதிற்பாபர்னிற்க
சந்தொருகளேயுஞ்சோமன் சபதமாய்ச்சனியுஞ்சேர
முந்தொருகேந்திரத்தின் மூழுக்கதிர்வெள்ளிராசன்
இந்தொருவிதமாய்னின்று லிவனுக்கேயோகமில்லை 12

வேறு.

ஆறுமிடத்துக்கதிபதியு மம்புலிசனியுமரவங்கூட
மாறுத்தனையொருபதிசேயுமறந்தேபணிரிண்டவன்கூடப்
பேறுவிடத்தான்பிருகாசு புந்தியிரவிசேர்ந்திடினும்
ஏறூட்டவத்துக்கினியவுறு மெடுத்தேதிரிவன்புவிமீதில் 13

நாலாமிடத்துக்கதிபதிரி நயந்தேபனிரண்டவன்சேர
மேலாமிடத்துக்கெட்டோனும் விணமதிசனியுஞ்சேர்ந்திடவே
ஆலாவிடத்துக்கதிபதியோ னமர்ந்தே செவ்வாயிரவியுடன்
சேலாயிப்படியிருக்கினுமே சேரவிடமரிதாய்விடுமே 14

நண்டோரதிபதிநலமில்லா நற்குருசுங்கன்சனியுமிரு
ஒண்டோவிவற்கிரண்டாகி னுறையிடுமதிபதியேழாகில்
திண்டோளிரவிமதிபுதனுந் தேர்ந்தமூன்றாமிடமிருந்தாற்
கண்டோர்தூஷணமேயல்லாற் கலங்கித்தவித்தேயிருப்பனுமே

வேறு

தொந்தமாய்ப்பாபர்சேர்ந்து சோபமாய்ச்சுபர்கணிற்க
அந்தமாய்ப்பாவர்நாலி லரவுமேநின்றாராகில்
விந்தய்மாலக்கினாதி விண்மதிலத்தமிக்கில்
எந்தநாளிருப்புமட்டு மிவனுக்கேயோகமில்லை 16

சேர்ந்துடன்பாபர்நாலாய்ச் சென்மாதிமதிக்குப்பத்தாய்
போந்துடநின்றாராகிற் பிருகரசவனேநீசன்
சேர்ந்துடன்சுபர்கணிற்கிற் சொல்லவேயோகமில்லை
வாழ்ந்துடனிருப்பதுண்டோ வந்தநாண்முதலாய்மாதே 17

நாலுடனுலினல்லோர் நயந்துடனிற்கத்தானுஞ்
சேலுடன்சென்மத்தாதி சேரவேசுபர்கள்பக்க
மாலுடன்பாபர்பாரா தாயினுமாதேகேளும்
பாலுடன்மகிழதாகிப் பாக்கியவானுமாமே 18

தனயொடுமினத்தான்லாபந் தனியனாய்நிற்கத்தானு
மனதொடுலாமத்தானு மகிழ்ந்துடன்றனமேசேரத்
தனமொடுலக்கினத்தான் றனித்தகோணத்தினிற்கத்
தனமிடும்பேருக்கெல்லாந் தலைவனாயிருப்பன்மாதே 19

மூனுகோணத்தார்கூடி முன்சதுரத்தினிற்கக்
காணுமேலக்கினத்தான் கலந்தொருசதுரத்தானும்

வேணுமென் றவத்தினின்றால் வேண்டியபாக்கியமுண்டு
சேணுமாயிரவிபோலச் செகத்தினிலிருப்பன்மாதே 20

வருவதுமில்லையோகம் வளர்பிறையில்லாதாகில்
இருபதினுதயமேழுக் கினியவர்சனிக்கேகாலாய்
மருவதுமில்லாக்கோண மன்னவாயிரவிசெவ்வாய்
ஒருபதிற்சனிக்கேநின்றா லொருநாளுமியோகமில்லை 21

சனிக்குநாலரவநிற்கச் சத்தமஞ்செவ்வாய்சேர
மதிக்குநாலிரவிநிற்க மற்றபொன்சுங்கன்புந்தி
பதிக்கொருவீன்மாகிப் பார்க்கவுப்பாபர்தானும்
இருக்கையிலியோகமில்லை யேந்திழைமாதேகேளாய் 22

ஏழிடமுதயமட்டி லிருக்கவேகுருவுநட்பில்
தாழ்வுடனீராறெட்டிற் றனியனாய்ச்சோமனிற்க
வாழிடங்குலைந்துநின்று வருவதேயோகந்தப்பி
போயிதழ்கோவைமாதே பொல்லாதசகடயோகம் 23

இரவிசனியிருந்தவீட்டுக் கேழிடமரசன்சுங்கன்
பரவிவஞ்சோமன்பத்திற் பாக்கியவானுங்கூடில்
அரவுசேய்நாலினின்றா லவனுக்கேயோகமில்லை
மருவிக்கண்டுரைக்கச்சொல்லு மனதினாலறிந்துமாதே 24

வேறு.

மந்தன்மாமதிக் கேட்டோர்கூடி
மருவியுதயத்துக் கெட்டோனாலாய்த்
தொந்தமாய்ச் செவ்வாய்நின்றாற்
சொல்லவே யோகமில்லை
வந்தநாண்முதலாய்ச் சென்மம்
வதையவே கரிட்டணாகி
எந்தநா ளளவுமேழை
யாகியே யிருப்பன்மாதே 25

வேறு.

உதயாதினின்றவீட்டுக் கெட்டவனுதயநிற்க
மதியாகிலீனமாகி மந்தனார்கூடிநிற்க

அதையாகவிரவிபொன் சேய்க்கமர்ந்துடனுலினிற்க
இதையாகவிருந்தாராகி லிவனுக்கேயோகமில்லை 26

மதியதுவிடத்துக்கொட்டோன் மகிழ்ந்துடனுதயநிற்க
பதியுதயத்துக்கெட்டோன்பனிமதியுடனேசேர
இதிபதியின்னிடத்தார்தாமு மிவருமேயாறெட்டாக
சதிபதிமாதேநின்றுற் சற்றுமேயோகமில்லை 27

இப்படிசொன்னநூலை யிதிற்குருசுங்கன்புந்தி
நற்படிசோமனின்று னலமுளோன்பாக்கியவானுய்ச்
சொற்படிகல்வியுண்டாய்ச் சுகமுடனிருப்பர்மாதே
மற்படிதீமைநன்மை மனதறிந்துரைக்கச்சொல்லும் 28

வேறு.

நல்சதுரமுக்கோணநலமானதனலாப
நாலிரண் டீராறிலும்
மால்பொருகவாட்சியாய் மருநீசவுச்சமா
மகிமைபகை நட்பத்தமும்
ஏல்பிரியவிதினின்ற வேழிரண்டதருமே
யிருக்குமது கோணமன்றி
சேலவேயிரண்டுநான் குடனேயிருந்தவர்
செகசக்கிர வர்த்தியோகம் 29

சொற்குறிகடனலாப மாகவேநின்றதன
சுபமான பாக்கியமீதில்
மெற்பொருதிபனிரண்டு மெட்டாறில்மிகதரித்
திரயோகனிற்கினிடமே
சொற்கினியசகலருங் கூடியாருகவொரு
சுகோணமதிற் கேந்திரமெட்டில்
பக்கினியதனலாப மாயினும்பாக்கியமிவர்
பத்துபத்தாதென்றுசொல் 30

வேறு.

ஒருவிதமாகவுண்டோ வுலகுளமாந்தாக்கெல்லாம்
வருபதவாக்கியமுண்டே வ தாத் துடன்மதியாலாய்ந்து
பொருந்தவேபார்க்கவுண்டோ போவதுவனந்தங்கோடி
கருத்ததைக்கினியசாரங் கண்டுடன்சொல்லவேணும் 31

உதித்தவன்புருடனுகி யுயர்மதியிடத்தோள்பெண்ணுய்க்
கதித்தவனடுவாய்நிற்கக் காரியவானுமானுய்
மதித்திடவந்துநிற்க மணியரவிரவிக்கேழில்
விதித்ததுபாரினூறு விண்ணுலகெங்குமாள்வன் 32

உதமதியிவர்களாணும் பெண்ணுமாய்நடுவேயேழில்
அதயவுன்புருஷனுகி லம்புவியுடனேசேர
விதயானிரவிசேர்ந்து மிருக்கவும்பக்கமாகச்
சதபாரியுடனேசேர்ந்து தானுமேயரசேயாள்வன் 33

உதயாதிபெண்ணேயாகி யுயர்மதியிடத்தோனுய்
மதியமாய்நடுவேயேழின் மனையிடமதியும்பெண்ணுய்ப்
பதியதாயிரவிகூடப் பாம்புமேசேர்ந்துநிற்க
அதிகதாயனேகபாரி யதியொன்றுயரசேயாள்வன் 34

யோகபங்கசாதகம் முற்றிற்று.

ஆக பாடல் 175.

பாலவரிட்டம்.

எட்டுடனெட்டுவீட்டி லிருந்தவன்பாபாதிங்
மட்டுடன்சோமன்காரி மகிழ்ந்துடனவர்க்கேயேழிற்
பொட்டெனவிரவினிற்கப் பொன்சுகங்கனிவர்க்கோலிற்
கட்டுடனிருந்தாராகிற் கடினமாமரணமாமே 1

எட்டவற்காறும்வீட்டி லிருந்தவன்சனியேயாகிற்
பொட்டெனாலிற்செவ்வாய் பிரியமாய்நிற்கத்தானு
மட்டறவிவர்க்கேநாலின் மன்னவனிரவிதிங்கள்
ஒட்டுறவாகநின்று லொருநாளின்மரணம்பிள்ளை 2

பாம்புநின்றதற்குநாலிற் பற்றியேசனியுநிற்க
வேம்புடனிவர்க்கேபத்தில் வெய்யவன்சுங்கன்புந்தி
ஆமிடமிதற்கேயேழி லம்புலிசெவ்வாய்நின்றாற்
காம்பிளமுலையினுளே கடினமாய்ச்சாவுண்டாமே 3

மதிக்காறில்மந்தனிற்க மறுவிடையிதற்கேயேழில்
அதற்கோணமாகச்செவ்வா யமர்ந்துடனிருந்தாராகிற்
பதிக்காறிலிரவிபுந்தி பாங்குடன்சேர்ந்தேநிற்க
விதிக்காறுமாதந்தன்னில் விளையுமேமரணமாமே 4

விதியதிற்சனியேநிற்க வீறிமுன்னிரவியின்சேய்
அதியதற்கஞ்சிற்பாம்பு மவருடன்பதியுநிற்க
பதியதற்கீராறுகப் பருசுங்கனரசன்புந்தி
சதிரதமாகநின்றாற் சாவதுமெய்தான்பிள்ளை 5

சோமனுரிருந்தவீட்டிற் சொல்லிடஞ்சனியேநிற்க
சோமனுர்வலமாயாறிற் றீயருங்குருவுஞ்சுன்
பாமனுரிவர்க்கேரண்டிற் பணிபுந்திகூடிநிற்க
ஏமனுர்கூடவந்து விழுந்துடன்போவானன்னே 6

எட்டவனிருந்தவீட்டி லிரவியும்பாம்புங்கூட
மட்டெனவவர்க்கேயேழின் மகிழ்ந்துடன்செவ்வாய்சேர
விட்டவனிடத்தில்மந்தன் வீண்மதியிவர்க்குமாறில்
மட்டுடன்சுபருநீச மாயினுற்குழவிசாமே 7

சாற்றியவெட்டோனீசஞ் சதுர்பின்னோனத்தமிக்க
வாற்றியவுதயத்தாலும் வலமதுசெவ்வாய்கூட

மாற்றியவரவங்காரி பதிக்கேழினின்முராகிற்
போற்றியதனத்திற்சுங்கன் புந்தியுநின்முற்சாமே 8

குருவுக்குமெட்டிற்காரி குருமதிற்காறிற்பாம்பும்
பிருகுக்குமாறிற்சேய்க்குப் பிறக்கிம்ஞனத்தமிக்க
மருவொக்கப்புந்திநீச மகிழ்ச்சியில்லாமனிற்கக்
கருவற்றுப்போமேபிள்ளை கண்டுடன்சாவதாமே. 9

கதிருதயத்துக்கெட்டோன் கனக்கவேயுதயஞ்சேர
அதைசதிற்காரிசெவ்வா யமர்ந்துடனிருக்கத்தானும்
எதிரதிற்சுபரில்லாம லிருக்கினுமாதேகேளாய்
சதிரொருநாளுமில்லாச் சாவதுவருவதுண்டே. 10

அருக்கனுக்கெட்டோனேழி லதிற்சனிகூடிநிற்க
உருக்கமாயுதயத்தானு மொருமையாயத்தமிக்கப்
பெருக்கமாய்ச்சோமர்க்கெட்டோன்பின்புடன்மதியுஞ்சேர்ந்தால்
அருக்கமாய்ப்பிறந்தபிள்ளை யன்றிரவதனிற்சாவே 11

புந்திமதிசுங்கன்கன்னி பொருந்தியநாலின்மைந்தன்
விந்தியபாம்பிரண்டில் வெய்யவன்விரையநிற்க
வந்தியுஞ்செவ்வாய்பத்தி லாறினிற்குருவேநின்முற்
சந்தேகமில்லைமாதே சாவதுவுடனேயுண்டு. 12

செனித்தொருசனியுந்தானுஞ்சேர்ந்திடவரவங்கூட
இனிக்குருவேழினிற்க விவர்க்குநாற்பூமன்சேர
தனித்தாரெட்டில்வெய்யோன் றமக்கேழிற்சோமனின்முற்
கனிக்கரமானபிள்ளை கண்டிருமாதஞ்சாமே. 13

கருமுகில்வண்ணன்காரி கதிரவனேழினிற்கப்
பிரியமாய்ப்புந்திக்கேழிற் பெருளசோமன்சேர
அரியதாய்க்குருவுக்கேழி லவ்வெள்ளிபூமனிற்கச்
சரியதாய்நின்முராகிற் சாவதுவுண்டுமாதே. 14

கலிவிருத்தம்.

உத்யமாமதி பனிரண்டாகிலும்
அதயமேகுரு வாறெட்டிலேமதி
இதையமேபதிக் கேழிற்சனிநிற்கில்
வதையுமேழிற் குழவியுமாளுமே. 15

வேறு.

மந்தனார்க்கிருபக்கங் கதிரோன்செவ்வாயாம்
மகிழ்ந்துடனேயெட்டி லொருபாம்பாகநிற்கத்
தொந்தனாய்ச்சுந்தரர்க்கே சனியுமேழாகச்
சுபருமிரவியிடையி னன்னிடமதாக
வந்தனாருதயத்துக் கதிபதியேநிற்கில்
வருநீசமாகியே விரையத்திடமீறில்
அந்தனார்புரமதில் மதிப்பாகவேதான்
அவிந்துசேய்வருவதறி தாகப்போய்விடுமே 16

வேறு.

ஆறெட்டுக்குடையோர்சேர்ந்தெயம் புலிராசன்சுங்கன்
மாறிட்டேயெட்டாரு கமதித்தங்கேகூடாராகிற்
கூறிட்டவுதயந்தன்னிற் குறிவிடைநிற்கத்தானும்
வேறிட்டுப்போமேபிள்ளை வீயுமேயாண்டிரண்டில் 17

இரவிசனிசெவ்வாய்தானு மிருந்தவரின்னிடத்தார்சேர்ந்து
கருதியுதயத்தினிற்கக் கனமதியீனமானால்
அரவுமேயீரெட்டாக வமர்ந்துடனிருந்தாராகில்
தரவரும்பின்னேநில்லார் சாவது குழவிமாதே. 18

வேறு.

பகையோரரைந்துமின் னிடத்தாரு
மிகையோர்நாலிற் சேர்ந்திடவே
மிகையோர்நாலின் மின்னிடத்தாரு
மேலெட்டாறினு மிருக்கினுமே

வகையோர்பொல்லா தொருவனுமே
வந்துதயத்தில் நின்றிடவே
நகையோர்பருவஞ் சேர்த்திடுமே
நற்கிளிமாதே யுரையதற்கே. 19

வேறு.

கண்டுடனுதயமுன்னும் பின்னுமாப்ச்சனிசெம்பாம்பும்
விண்டுடனின்றாகில் விண்மதிகுருவுமெட்டில்
மொண்டுடன்சுங்கன்மூன்றில் முழுக்கதிர்நாலினின்றாற்
கொண்டுடன்போவதற்குக் குழவியுஞ்சாகுமாதே 20

சுங்கனுக்கீராறெட்டிற் சூரியன்காரிசெவ்வாய்
அங்கனேராசனின்ற வதற்கெட்டிலரவுநிற்க
பொங்கமாய்ச்சனிககேநாலிற் போயிருந்தவனுஞ்சோமன்
இங்கிதமாகநின்றா லிவனொருவாண்டிற்சாவான். 21

ஏழுடனுதயம்பத்தி லிருக்கவெசனிசெய்தீயர்
வாழ்மதிநல்லோராண்டில் வருநவத்திடத்திருந்தால்
தாழுடனரவமெட்டிற் றளர்ந்திடவிருந்தானாகில்
வாழுடன்கூடப்போமே வந்தநாளதனிற்சாகும். 22

கோணத்தார்சேர்ந்துமெட்டிற் கூடியேசனியுநிற்க
நாணொத்தமதியும்வேந்த னுலிரண்டாகிநிற்க
சேணுற்றசெவ்வாய்ரண்டிற் செப்புள்ளிபாம்புநாலிற்
காணொத்துநின்றாகிற் கருதியேகுழவிசாமே 23

ஆதித்தன்காரிசோம னமர்ந்துடன்கூடிநிற்க
கோதித்துக்குருவுமெட்டிற் கோணமேயரவநிற்க
சாதித்துத்தனத்திற்செவ்வாய் சரியவருடனேசுங்கன்
வேதித்துநின்றானாகில் வீயுமேயாண்டிரண்டில். 24

போமென்றுசொல்லுமாதே பூமனுர்சனியுமெட்டில்
ஆமென்றலக்கினத்தா னவனுமேயிரவிகூடில்
ஏனென்றவுதயந்தன்னி லெட்டவனிருக்கத்தானும்
நாமென்றுசொல்லவேண்டா நமனுமேகொண்டுபோவான். 25

போமென்றுசொல்லமாமோ பிதுந்தவனீசனீசம்
ஆமென்றுசொல்லலாமோ வந்தெட்டுக்கெட்டோனீனம்
நாமென்றுசொல்லப்போமோ நன்மதிபகையுமானாற்
சாமென்றுசொல்லுமாதே சத்தொருகளையும்பேறு 26

இந்தடவாகநின்றா லிதிற்குரு பார்வையாகில்
வந்தடவாகிநின்று வழிபார்க்கு மெமபுரத்தே
செந்தடவாகிச்சுங்கன் சென்சாதிபார்வையாகிற்
புந்திடத்திருந்துமாதம் போய்விடுமென்றுசொல்லும் 27

பிற்பிறைசனியும்பாவி பிரியமாய்நிற்கக்கூட
நற்பிறப்பில்லாகிவட்டோ னலங்குன்றியத்தமிக்க
உற்பிறந்ததியுங்கேந்திர கோணருநலமேயன்றில்
தப்பதைசொல்லலாமோ சாவதுநிசமேயுண்டு 28

புல்லதாய்சனிக்கேநாலிற் பூமனார்பகைத்தேநிற்கக்
கொல்லதாயிரவிநாலி லொருவர்கூடாமனின்றால்
மல்லதாய்ப்பிறையுந்தேய்ந்து மதிக்கெட்டிலுதயநின்றாற்
சொல்லலாஞ்சாமேயென்று துணிந்தவர்க்குரையுமாதே 29

மறித்தொருசனியுநிற்க மற்றபொன்னத்தமிக்க
வெறித்தவன்சுங்கனீசம் வெய்யவன்மதிக்கேயெட்டிற்
பறித்தவன்பகையோசேர்ந்து பாம்புசேய்க்குதயநின்றாற்
குறித்துடன்சொல்லுமாதே குழவியுஞ்சாமேயென்று 30

செனித்தலக்கினாதிநீசஞ் சென்மாதியத்தமிக்க
குறித்தங்கேசனியுமெட்டோன் கூடியேயுதயஞ்சேரக்
கதித்தொருசெவ்வாய்நாலிற் கண்டிடிலேழிற்பாம்பு
மதித்துடனின்றாராகின் மரணமேகுழவிதானாம் 31

சேராதபாவியோடே சென்மாதிகூடிநிற்கப்
பாராதநவ்லோர்நின்று;பனிமதிக்கெட்டாய்நிற்பக்
காராமலுதயத்தானாங் காரிசேய்க்கேழினிற்க
வாராதுவதுமேதீங்கு வையகம்புகழூபாதே 32

ஒருமையாய்க்காரிசெவ்வா யுதயத்திற்சேர்ந்துநிற்க
அருமையாய்ச்சோமனேழி லலயுங்கூடனிற்கப்
பிரியமாய்நாலிற்பாம்பு மிதற்காசெட்டாமுகிற்
கரியதாய்ப்பிள்ளைகூடக் கலந்துடன்சாமமாதே 33

பத்துடன்பத்துவீட்டிற் பதியவர்துதியாநிற்க
வித்துடன்கோணத்தாரு மிழிகுலமாயிருக்க
மைத்துடனுதயமேழோன் மனமடிந்தத்தமிக்க
செத்துடன்போமேபிள்ளை சீணசந்திரனுமானல் 34

விண்ணவர்பிறக்கிற்றீது விளையும்வாறேதோவெள்னில்
நண்ணவர்சுகப்படாம னலக்கமாய்மரிப்பேயாகில்
நிண்ணவர்பாம்புசேய்க்கு மிகக்கரிதீயர்சேர்ந்து
கொண்ணவர்நாலாய்நின்ற கொடுங்கணைமுகத்தினுளை 35

வையகத்துதித்தபேர்க்கு வருகின்றவரிட்டமெல்லாம்
பொய்யரவிரவிகாரி பூமனுநாலாய்க்கோணம்
மெய்யுறவாகிநின்று மிகைத்தவர்க்காறெட்டாகிற்
கையறமாகநின்று கலங்குலர்புவியின்மாதே 36

மண்ணுளோர்பிறக்கிற்றீது வருவதுகேளுமாதே
நண்ணுளகேந்திரகோண நகருளோராறெட்டாக
கண்ணுளாரீராறெட்டார்க் கதித்துநாற்கோணஞ்சேர்ந்தால்
எண்ணுளசுகமுக்தப்பி யிருப்பதுமில்லைகண்டாய் 37

மரணமேயென்றுசொல்லு மதியுமேசனிக்கேயெட்டில்
அருணனையரவந்தீண்டி லப்பமேவபிறப்புநோக்கி
இரணமாய்ப்போமேபிள்ளை யிருப்பதும்பொய்தான்கேளும்
அரவினிலிருந்திட்டாலு மன்றிரவதனிற்சாவே 38

சாவதுமெய்தான்சொல்லுஞ் சனிக்கெட்டிலிரவிநிற்க
ஆவதுகளையுயர்ந்து வப்பூரணமதியிற்மாம்பு
நாவதுநீட்டிப்பார்த்து நடுவதிலுதித்தகாளை
போவதுமெய்தான்சாவே பொல்லாதகெடுதிமாதே 39

பூரணபிலத்தினோடும் புண்ணியசுகமேயாகிற்
காரணமில்லைசாகக் கனக்கவேவயதுமுண்டு
சீரணமதியேயானாற் செல்வருந்தாழ்ந்துநிற்பர்
கூரணிபாபர்மேலாய்க் கொல்லுவர்கொஞ்சநாளில் 40

எட்டிரண்டுடனேசோம னீனமில்லாமனிற்க
விட்டொருபதினாலேழிற் கினியவர்மேலாய்நிற்பர்
மட்டொருகளையினின்றான் மாறுமக்கோணர்மேலோர்
தொட்டதுகுறிதான்பார்த்துச் சொல்லவும்வேணுமாதே 41

முன்மூன்றுபிறையிற்பொல்லார்
மூன்றுகோணத்தார் பொல்லார்
பின்மூன்றுபிறையிற் கேந்திரம்
பதியாரும் பொல்லாதாவா
தன்னாறும்பனிரண் டெட்டோர்
சமனாக விருப்பர்தாமும்
வன்காத லுள்ளமாதே
வசையறிந் துரைக்கச்சொல்லே 42

பொல்லாதபாபர்நிற்கப் பூந்திடப்புந்திதானும்
எல்லாரும்நலமேயாவ ரிருந்திடவிரவிநல்லோர்
சொல்லாதபகையேகொண்டு தோன்றியவயதுமட்டும்
இல்லாதுசொல்லப்போமோ விளங்கின்ளைக்கினியமாதே 43

உச்சமேயாகினல்லோ ரொருவேளைநீசமாகும்
அச்சமேபொல்லாதாகி யவருமேதீங்காய்நிற்பர்
கொச்சமாய்நீசமாகிக் கொஞ்சமாயுச்சமுண்டே
மெச்சவேநல்லோனாகி மேலாகிநிற்பன்மாதே 44

ஆட்சியாய்நின்றபேர்க்குத் தாட்சியுங்கொஞ்சமுண்டே
தாட்டியாயிருந்தபேர்க்கு மாட்சியுங்கொஞ்சமுண்டு
ஆட்சியாய்மகிழ்ந்துபார்த்துத் தாட்சியாய்த்தள்ளவேண்டாம்
சாட்சியாயூடுதாக்கிச் சரிப்படச்சொல்லுமாதே 45

பகையென்றுசொல்லப்போனு லொருவகைநலமேயாகும்
நகையென்றுசொன்னுல்வந்து பகையாகநிற்குமாதே
மிகைவகைதெரிந்துபார்த்து மேதினியோர்க்குச்சொல்லு
வகைதொகையறியாதார்க்கு வகுத்துரையினியமாதே 46

பாலவரிட்டம் முற்றிற்று.

ஆக பாடல் 219.

ஆட்சியுச்சமறிய.

ஆட்சிநட்புச்சநீசமறியவேபகையுங்கூட
சாட்சியாயுதயங்கண்டு சதுர்கோணமீராறெட்டு
மாட்சியாய்லாபம்ரண்டு மதிலழிந்தூடுதாக்கி
ஆட்சியாய்ப்பார்த்துச்சொன்னு லையமேயில்லைமாதே 1

ஒன்பதுபேருநின்ற னிலைதனையூடுதாக்கி
இன்பமாயொன்றுக்கொன்று யிருப்பதுகேந்திரகோணந்
தன்பதிமதிக்கீராறெட் டனலாபமானோர்கொண்டு
பொன்பதிமதிக்கேபார்த்துப் போம்பலன்சொல்லலாமே. 2

காரியைப்பிடித்துப்பார்த்துக் கடுகவேவிதியைச்சொல்லு
சூரியனிருந்தவீட்டிற் சொல்லுமென்பிதாவுக்குள்ளே
வீரியபாம்பைப்பற்றி விண்ணுமௌார்யோகஞ்சொல்லு
கூறியசுங்கனல்ல சனிக்கெசமாகச்சொல்லு. 3

பூமகனுருடற்பிறப்பைப் பொதுவுறவாகச்சொல்லு
நாமனுர்பேரும்புந்தி நற்கணக்கினியபுத்தி
தாமரைமுகத்தினுளே தையலேசொல்லக்கேளுஞ்
சோமனுர்முதலாய்க்கொண்டு சொல்லவேவேணுமாதே 4

வேறு.

மந்தன்பூமன்மதிக்கெட்டில் மற்றோர்குருவுஞ்சுங்கனுமே
வந்தங்கிருந்துமாலினுக்கும் வகையாயிரவிமதிக்கெட்டில்
நொந்தங்கிருந்தாற்சகலமுமே நோக்காடாகவிளையுமது
பந்தங்கூறிச்சொன்னாலும்பலியாதிவர்க்குப்பகைவருமே 5

வேறு.

எட்டோனிரவியாகிமதிக்
கெட்டாயிருக்கினும் பகையாமே
கட்டாயமர்ந்து வெட்டினுமே
வெட்டாவரசன் கட்டினுமே
கெட்டோனரவ மிருந்திடத்துக்
கெட்டாய்ச்சுங்க னிருக்கினுமே
கெட்டோன்கெட்டா லதுபோலக்
கூறுமுயிருமாண்டிடுமே. 6

மட்டாய்ச்சுங்கனு மதிக்கெட்டல்
மாந்தேயரசன் விதிக்கெட்டில்
எட்டாயிருந்த நவர்க்கெட்டி
லிரவிபாம்பு மிருந்திடவும்
கெட்டாய்ச்சனியவர்க் கெட்டாகிற்
குருவும்புந்தி யிரவியுடன்
விட்டாய்சிட்டாய்ப் பறந்திடுஞ்சேய்
மீதினிலிருப்பவற் குரைமாதே 7

வேறு.

இரவியாறெட்டினிற்பொன்னவனிருக்கநோக்கமுறப்
பரவியாயுயர்ந்தபிறைக்கே யிருநான்கிற்பாம்புனிற்க
அரவுனின்றவவ்வீட்டிற்கே யாறுமெட்டினிலமர்ந்து
மருவியசெவ்வாய்சனியுஞ் செனித்தசேய்மாண்டிடுமே 8

கலி விருத்தம்.

உதயத்தாரு மிரவிமதினிற்ற
மிதியொத்தசனிக் கேயிருநான்கினில்
மதியொத்தேதொரு நான்கினிற்சேய்சுங்கன்
விதியற்றிருப்பது மிப்படியாகுமே 9

வேறு.

உதயாதியாகப்பார்க்க வுபமதுகாணுதாகின்
மதியாகப்பிடித்துப்பார்க்கில் வறுமையுந்தெரியதாகில்
கிரகாதியாகப்பாக்கக் கிடைத்திடுமுள்ளதெல்லாம்
விதியாகச்சொல்லுமாதே வேறொருவினேயன்றி 10

இப்படிசொல்லத்தக்க தெத்தனைகுறியோவென்னில்
நற்படியுதித்தோர்நல்ல நாகம்போற்கிரகம்போல
சொற்படிநன்முகுர்த்தஞ் சோபனம்ருதுவுசாந்தி
அப்படிபன்னிகாது வணையவுமதுவேயாக. 11

சுபமதுசெய்யுங்கன்மஞ் சொல்லவும்வேறேவேண்டாம்
நிபமதுலட்சந்தோஷம் நிறுத்துமேகாககேந்திரம்
எபவதாய்ச்சுபங்களெல்லா மெத்திக்குமதுவினன்று
உபமதுகேந்திரநல்லோ குறுதியினடுவேசொல்லும் 12

ஆட்சியுச்சம் - முற்றும்.

ஆக-செயயுள்-231.

பொதுமுகூர்த்தம்-உறவுபகையறிய

சொல்லுநீர்பகையார்கேளுந் தோன்றியவுதயமெட்டோன்
நில்லுமோரதியுங்கூட நிரமதுவிரைமாறுன்
கொல்லினும்பகைதாலுண்டு கொண்டிருந்தவருங்கூட
வல்லினுமிருந்தாராகில் வருவதுபகையேயுண்டு 1

பூரணமதியேயானு லதிற்பொல்லாதாரோவென்னிற்
சீரணமில்லாக்கொற்ற வவனுமேயீராறெட்டிற்
காரணமாகநின்றாற் கனக்கவேபகையுமுண்டு
வாரணிதனத்தினாளே வருமிதுபகைதான்கேளும் 2

உதயமோரதியுநின்ற வொளிமதிபதியுஞ்சேர்ந்த
வதையதற்கெட்டாற்காரி வள்சேய்க்குமரசனாக
சிதையொத்தமதியாஞ்சுங்க னிருப்பதுவேழினன்று
இதைப்பிந்திபுந்தினின்று லினித்தோஷமில்லைமாதே. 3

சொன்னதோர்கேந்திரத்திற் சுகமதியரசன்சுங்கன்
நின்றதிற்கேந்திரமானு னில்லாதுபாவதோஷம்
ஒன்றினிலைந்துக்கைந்தா யொருமையாய் நின்றாராகில்
வின்றதிலுலகிலுள்ள தோஷமுமோடிப்போமே 4

சந்திரற்காறிற்புந்தி சரசமீராறில்மந்தன்
சுந்தரர்க்ரைந்திற்சுங்கன் சொன்னவதிடத்துவேந்தன்
தந்திரமாகனின்றாற் சற்றுமேதோஷமில்லை
இந்திரவிமானம்போலே யிருந்றுடன்வாழ்வதாமே 5

கனத்துடன்காரிசெவ்வாய் கனமுடனிரவிபாம்பும்
இனத்துடனெட்டாறாக விருக்கினுநலமேயுண்டு
மனத்திடமாகநின்றான் மாறுமேதீமையெல்லாம்
சினத்துடனிருந்தாறுகிற் செவ்வமுங்கொடுப்பர்மாதே 6

உதயமுமதிக்குங்காரி யொதிங்கியேநிற்கத்தானுஞ்
சிதையவேயிரவிசெவ்வாய்ச் சேராமலாபமாறில்
மதிபதியதற்கேழன்றி மற்றொருவிடமாய்நிற்க
இதையாகனின்றாராகி லெந்நாளும்பதமேயுண்டு 7

கனத்ததோர்குருவுக்கெட்டிற் காரியும்விடையுமாகா
சினத்ததோர்மதிக்கேயேழிற் சேர்ந்திடும்புந்தியாகா
இனத்தொருமிரவிக்கெட்டி லிருந்திடுமதியுமாகா
மனத்தொருசுங்கனின்ற மனைக்கெட்டிற் செவ்வாயாகா 8

இன்னொருபகைதான்கேளு மிரவிக்கேழ்சனியுமாகா
பின்னொருசனிககேழ்நாலிற் பூமனிருக்கலாகா
முன்னொருவிராகுக்கேழில் முழுசுங்கனிற்கலாகா
வென்னொருபூமனுர்க்கு வேழினிற்சனியேயாகா 9

கொத்தவர்க்கெட்டிற்சோமன் ருறியிலுமிருக்கலாகா
மெத்தவர்க்கிரவிக்கெட்டிற் கொற்றவனிருக்கலாகா
சுத்தமாய்க்காரிக்கெட்டிற் சுங்கனுமிருக்கலாகா
அத்தவனிரவிக்கேழ்நா ளரவமுமிருக்கலாகா 10

அரவமுங்காரிநான்கு மேழிலுமிருக்கலாகா
இரவிக்குமேழுமாகா விருப்பதும்பூமர்க்காகா
உரவற்றுனிற்கும்வாறு முபமிதுபாராராகில்
வரவுக்கும்போக்குக்கண்டு வகைசொல்லமாட்டாய்மாதே 11

இனியொருபகைதானுண்டு வியம்புவேன்சொல்லக்கேளும்
தணியிருகுருவுக்கெட்டோன் தான்வந்துகூடிலாகா
சனிமதியுதயமெட்டோன் தாமுமேகூடலாகா
பனிசுரங்கன்வீட்டோன்வந்து பற்றிருந்தாலுமாகா 12

உற்றதோர்மதிக்கேயெட்டா னுதற்கட்டமாதிகூடம்
இற்றதோரிரவிக்கெட்டோன் மந்தரைபுந்தியூரான்
ஒற்றதோர்கூடினலு மொருமதிக்கிவருமாகா
அற்றதுசொன்னேனின்ன மாகாதுவுண்டுமாதே 13

சுங்கனற்கெட்டோன்மந்தன் சூரியனிடத்தான்வேந்தன்
பொங்கமாயிடத்தான்சேர பூமனர்வீட்டான்கூடி
அங்ஙனேசுங்கன்பக்க லமர்ந்துடனிருக்கலாகா
மங்கைநேரினியுமாதே யின்னமற்றதுசொல்வேன்கேள் 14

உதயாதிமதிபதிசுங்கன் வேந்தர்க்கெட்டோன்
இதமாகவிருந்திட்டாலு மேந்திழைமாதேபொல்லார்
அதையோர்னின்றதுவேபார்த்து வமர்ந்தனர்பகைநட்பென்று
விதமறியாதபேர்க்கு விதையுரைக்கினியமாதே. 15

அரவுக்குவாறுவீட்டோ னவருமேயாறெட்டாகிற்
குருவுக்குமதிவீட்டானுங் கூடாமலாறெட்டாகின்
மருவொக்கமதிக்கேயந்த குருவீட்டானுறெட்டாகில்
இரவுக்கேசமனுப்நின்று மிருவரும்பகையாய்நிற்பர் 16

காணியசுங்கர்க்கெட்டோன் கருதியேபுந்திக்காக
பேணியபுந்திக்கெட்டோன் பெரியசுங்கர்க்குமாகா
நாணியேயிருந்தாராகி னலமில்லைதோஷமுண்டு
பேணியேபகையாய்னின்றாற் பெருமையுமில்லைமாதே 17

அரசர்க்குநாலேழ்பத்தோ னம்புலிக்குறவேயாகும்
விரிசதிர்மும்மூன்றைந்து மூன்றுடன்வீட்டார்தாமும்
அரிட்டசுங்கர்க்குநல்லோ ராறெட்டுப்பனிரண்டோரும்
சரசமாய்ச்சனிக்கேநல்ல சத்துருவல்லகண்டீர் 18

வேறு.

நலங்கொண்டநன் மதிக்கேநாலேழு
கொற்றவர்கு நலமேயாகும்
பெலங்கொண்ட மூன்றுவைந்து
மொன்பதிடத்தோ னரசுங்குலமேயுண்டு
புரங்கொண்ட வீராறெட்டோன்
பொல்லாசனிக்கேநல் வல்லோர்தானும்
இனங்கொண்டு இப்படியே
நலமாகமேதினியி லிருப்பர்தாமே. 19

வேறு.

சுக்கிரனிருந்தாநாலேழ்பத் துடன்வீட்டார்தானு
மெய்க்குறவாமேசந்திரன் மேலுடன்வந்தோர்தாமு
மிக்குறவரமோராசன் விரையமோடெட்டாரோனு
நற்குறவரமேமந்த நண்ணதுவுறவுமாமே. 20

நில்லதுபாபர்நின்ற நிலையதுக்கெட்டாரானோர்
வல்லது சுபர்க்குநல்லோர் வரும்பகையில்லைமாதே

சொல்லதினலமறிந்து சூட்சியாயிருப்பார்சொல்லு
அல்லதுவறிந்தேபார்த்தோ ரமரர்க்குமிகவராவர் 21

சொன்னதோர்சாத்திரத்தை சோதித்துப்பார்த்தாராகில்
வின்னதிலுலகிலுள்ள வேதனர்க்கதிகமாவர்
மன்னவருலகிலுள்ள மணிமுடிக்கதிகமாகி
என்னவருலகில்வாழ்ந்து மிருப்பவர்க்கினியமாதே. 22

பொதுமுகூர்த்தம் உறவுபகையறிதல்.

முற்றும்.

ஆக-பாடல்-253.

திசைபொசிப்புயாரகமறிய.

உதித்திடும்பிள்ளைக்கின்ன முடற்பிறப்புண்டோவென்னில்
எதிர்த்திடுஞ்சத்துருமாதுரு மின்னமும்பிதுருபுத்திரர்க்
கதித்திடுவரவுகாரி மாமணியிவர்க்கேயெல்லாம்
விதித்தகாரணனவன்வீடு விகாரகனிலையும்பாரே. 1

செனித்தகுழவிக்குச்சொல்லுஞ் சீரதுபாகம்போலக்
குணித்ததுபார்த்துச்சொல்லு கூறியநிலையாய்ணிற்கும்
வெறித்துநீவேறேபார்த்து வெளியிணிற்றேடவேண்டா
மறித்தொருநாளும்பொய்யா மணிகோணகேந்திரசாத்திரம் 2

இத்தையேபார்த்துச்சொல்லு மெண்ணெணைக்கன்மங்கட்கும்
மத்தசத்கோடிசாத்திர மயங்கிடவேண்டாங்கண்டீர்
வித்தையோரதிகமுள்ள வேதனர்சொன்னநீதி
வித்தகன்சொன்னநூலில் விதம்போறதில்லைமாதே. 3

திசைநாதன்செய்யும்வாறுந் தீதுதான்சொல்லக்கேளும்
அசையாமணின்றகோண மதிற்கேந்திரர்கொல்வதில்லை

திசையாகவேழும்ரண்டுந் திசைநாதற்கவ்வாருக
நசமானமதிக்குமந்த வாகினைன்கொல்வன்தானே. 4

வருந்தவன்திசையில்வந்த வடிவுளோனுகிக்கொல்வன்
இருந்தவனேழுமாண்டு மிவன்பொசிப்பாகிக்கொல்வன்
கருந்தவன்காரிகூடக் கலந்தவன்பொசிப்பிற்கொல்லும்
இருந்திவர்பகையேயானு லிவருமேகொல்வர்மாதே 5

எட்டவன்றிசையுமாக மாரகர்பொசிப்புமாகிற்
பொட்டெனப்பகையுண்டாகிற் பொசிப்புவந்தளவிற்கொல்லும்
கட்டமுமனேகமுண்டு நகர்விடும்பறிபோந்தீது
தொட்டவன்போகுமட்டுந் தொந்தையுண்டுமாதே. 6

எட்டிணிலிருந்தோன்வந்தா லெழின்மதிக்கெட்டன்றீது
பெட்டவனவர்க்கேயேழு பொசிப்பிற்கண்டீராற்கண்டம்
மட்டிணிற்சோமணின்ற மனைக்கேழிரண்டுவீட்டான்
பொட்டெனவாகி ணின்றுற் போய்விடுமாவிதானே. 7

திசைமருப்பேதோவெண்ணிற் சேர்ந்தமாரகமெட்டேயாகில்
இசையிருமதிக்குமாரகனுமே பொசிப்புமாகில்
அசைவரவிவர்க்கேபொல்லா தாகாதபகையேயானுற்
குசமசக்காகக்கொல்வர் குறியிது கேளுமாதே. 8

வருந்திசைபார்த்துவந்து பொசிப்பவன்கையைக்கண்டு
தருமதுமாரகரைப்பற்றி சணிநன்றபகையையாய்ந்து
திருகிலாதூடுதாக்கித் தீநலஞ்சொன்னுன்மெய்யே
மருமணக்குழலினுளே வருந்திசைபார்க்கும்வாறே. 9

உயிருடல்மாரகரைப்பற்றி யொன்றியேதீயர்சேர்ந்து
வெயிரிட்டுனின்றபார்த்து விதைக்கொண்டுபோவாருண்டு
மெய்வழிந்துரைக்கவின்ன மாதிமாரகருமுண்டு
வயிரமேயிருப்பறிந்து வருதிசைபொசிப்பில்லைகூறுய். 10

வேறு.

மந்தனுமுதயமாரன்
மதிசேர்ந்தவிவர்கள்வீட்டில்

அந்தமாய்ப்பத்துபேரு
மாரசர்வரையறிந்து
வந்திசையொருமைசொல்ல
மாரகர்பகையறிந்து
சொந்தமாய்நட்பறிந்து
சூட்சமதறிந்துசெப்பே 11

திசைபொசிப்புமாரகம்-ம்—முற்றிற்று.

ஆக பாடல் 264

புத்திர பாவமறிய.

பஞ்சமனுட்சியாகப்பகைகுருபாபரன்றி
செஞ்சுடர்க்கிரணனரல் சீரரவமந்தன்பக்கல்
மிஞ்சினலேழுபத்தின் மிகுத்திடினின்றராகிற்
கொஞ்சியேயனேகபுத்திரர் குறைவில்லாவாழ்வுண்டாகும் 1

ஐஞ்சுடனேந்துவீட்டா ரதுவிடம்பார்வையாகின்
மிஞ்சியாண்டளப்பானுட்சி மேருவினிற்கத்தானும்
நஞ்சுகொண்டிருந்தோனரல் ஞாயிறுபுந்திநீலன்
வஞ்சிரண்டாறெட்டாகில் வருஞ்சேயுமனேகமுண்டு 2

புத்திரரிடத்தேநல்ல புண்ணியவானுனிற்ற
மித்துருவானன்பக்கல் புத்திரவானுஞ்சேர
சத்துருபாபர்தானுஞ் சரியதாய்நில்லாறைகிற்
பத்திருமறையோனுற் பாராளப்புத்ரருண்டு 3

நாலாறுவிடத்தினல்லோர் நற்குருவுச்சமாட்சி
மேலாறுபின்னேழோனு மிகைத்துலாபத்தில்நிற்கத்
தாலாறுபனிரண்டெட்டிற் றாழ்வுள்ளபாபர்சேரப்
பாலாறவுடையோராகிற் பாராளப்புத்ரருண்டு 4

அரசனுர்பிலத்துநிற்கவந்தைந்து குடையோனட்பாய்
சரசமாயைந்தாம்வீட்டைக் சத்துருபாராருகில்
அரிசமாய்ப்பொல்லாராட்சி யுச்சமாயிருக்கிற்ருனும்
விரசமாயனேகம்புத்ரர் விளேயுமேமறிப்பில்லாமல் 5

குருவொருமீனமில்லாக் கோணத்தினடுவேநிற்க
அருகிருமைந்துவிட்டானவனுமேலாபமாகில்
திருகொருபாபரந்தச் சேய்காரியாறெட்டாகில்
வருமொருமைந்தனல்லோ ராயிஞற்புத்ரருண்டு 6

அந்தணனேந்தோனுக வவர்க்கொருபகையுமில்லாச்
செந்தணன்மேனியானுஞ் செஞ்சுடர்கிரணன்காரி
வந்தணேயாமற்பத்தேற் நான்குடனிருப்பதன்றி
சந்தணமேடைமீதிற் சாரவும்புத்ரருண்டு 7

வேறு.

ஆரற்கரிவிடைய மூலவன்மறையோ
னேந்தவனுக்குறவாகிற்
சேரற்கொருகுரு சீதனபுதல்வன்
செவ்விடைவெள்ளியுமேயாகில்
மாரற்குருவைந்திட மானதையோரை
மறுவன்றியசுபர்பார்க்க
வீரற்கினியதை பீதகனுட்சியாய்
விண்ணுலகாளவோர்புத்ரர் 8

கல்லுண்டாவனஞ்சிடமன்றிக்
கரியோனிலமகன் பகலில்லா
வில்லுண்டானவ னுதயனுமே
மேருவில்வெள்ளிக்கெதிரில்லா
சொல்லுண்டானவனேந்தோனுஞ்
சிறுமீனடிதலேயில்லாமல்
அல்லுண்டானவனேந்தடியான
அவனுக்கேமிகுசே யுண்டாம் 9

வேறு.

அஞ்சிடமைந்தோன்மந்திரியவரிருந்திடதைப்பாபர்
மிஞ்சிடப்பாபராகின் மிகவத்தமானமில்லா
தொஞ்சிடமுன்பின்பாபர் தோன்றியேநில்லாராகிற்
கொஞ்சிடவனேகம்புத்ரர் கொடும்பகைநீசமன்றில் 10

வேறு.

ஈரைந்துடையோனோரைந்தி
விருந்தோர்க்கேழினான்குடையான்
ஓரைந்துடையா னீரைந்தி
லொருமித்தரசனிவர்க்கேழிற்
பாரைந்திடையினோக்கமில்லாப்
பாபரொதுங்கி நிற்கிலுமே
சேரைந்திடையுஞ் சுபர்நோக்க
செழிக்கவருமிகபுத்திருமே. 11

மன்னவன்மந்தனோக்கில்லா
மனையவர்காரிக்கெதிரில்லா
என்னவனைந்திலிருக்கீரா
லிருபாகமருக்கன்குசனில்லா
அன்னவனைந்தேழ் போக்கில்லா
வம்புலிநின்றவர்க் கதிரில்லா
சொன்னவனைந்தேழ் கரியில்லாச்
சிவந்துகுழவிவரும்நில்லா 12

வேறு.

ஆட்டினிலாறனிற்க வைந்திடமதுவேயாக
வீட்டினிற்குருமீனாகில் வேண்டியபுத்ரருண்டு
கேட்டவர்க்குரைக்கலாகுங் கேடிலாதிருக்குமாதே
எட்டரையேழின்மந்த னிருந்திடாதிருக்கின்மெய்யே 13

தேளினிற்செந்தீவண்ணன் செனித்ததற்கைந்தேயாக
ஆளுமோராசன்வில்லி லமர்ந்துடனிருந்தானாகின்

மாளுமுக்கோணம்பின்னே மந்தனுமில்லாதானுற்
கேளுநீபுத்ரருண்டு கேட்டவர்க்குரையுமாதே. 14

அரியவனுட்சியைந்தாயமர்ந் தொருகுருவேமேஷம்
பெரியவனுகிமைந்தன் பேருளமிதுனமாகிற்
சரியவருடனேபுந்தி சத்துருவன்றிநிற்க
தெரியவேகேட்டோர்க்கின்னந் திரள்புத்ரரென்றுசொல்லே 15

இருந்தவனைந்திற்பெண்ணுயிடமவனுணேயாகிப்
பிறந்தவன்புருஷனுகிற் பெருமதியிடத்தோன்பெண்ணுய்
பொருந்தவர்க்கேந்திரகோணம் பொன்னுக்கேயாகிநின்றுல்
வருந்தவம்வேறேவேண்டாம் வந்திடுமாணும்பெண்ணும் 16

மதித்ததிற்புருஷனுக மன்னவனிருப்பிடத்து
கெதிர்த்ததிலேந்தோன்பெண்ணுய்க் கேந்திரமாகினுலும்
பதித்ததிற்பெண்ணேயாகிற் பஞ்சமத்தானேனிற்க
விதித்ததுவாணும்பெண்ணும் வேண்டியதிரளேயுண்டு 17

வெள்ளியுமைந்தினிற்கவியாழுமதுவீடாகத்
தெள்ளியமறையோனின்ற சீர்மனேசோமனுகில்
அள்ளியவைந்தோனின்ற வம்மனேசுங்கனுகில்
முள்ளிசெண்பகம்போல்வேண முழுதிலும்பெண்களுண்டு. 18

அம்புலியைந்தினிற்க வம்மனேசுங்கனுகில்
நம்புநல்லேந்தோன்சுங்க னடுமனையதனிற்கூடச்
செம்புடன்மறையோனண்டின் சொல்பெண்ணங்கிழமேயாகில்
இம்புவியிருக்குமட்டு மிவனுக்கேபெண்களுண்டு 19

பொன்னவனைந்தோனின்ற பொருதினியதனுங்கூட
நின்னவனதற்கேழ்நின்றோனிலேபெண்ணுங்கிழமேயாகின்
மன்னவர்பாராராகின் மற்றதிக்கோளரன்றி
என்னவனிருந்தாராகி லெந்நாளும்பெண்களுண்டு. 20

புத்திரபாவம் - முற்றும்.

ஆக பாடல் - 284.

அபுத்திரபாவம்

உதயத்திற்கைந்தின்மைந்த ஞேரெட்டிற்பூமனிற்க
அதையத்துக்கேழில்ராசனஞ்சவன்கனலிசேர
மதியத்திலரவஞ்சேர்ந்து மைந்தனுக்கேமேயாகில்
விதியத்தின்மலடனென்று விளம்பினர் நூல்வல்லோரே 1

பத்துடன்பின்சேயைந்தில் பகலவனிருக்கநோக்க
ஒத்துடன்காரிலாபமுதயனுங்கூடிநிற்க
இத்துடனஞ்சோனீசமாயினன்மாதாகேளுஞ்
செத்துடன்பிறப்பில்லாமற் சென்மாதிமலடனவன் 2

அந்தமாய்ச்சோமனீச மதிற்குருபார்வையாகின்
மந்தனைந்துக்கேழில் மறவிடைசேர்ந்துநிற்க
இந்தொருலக்கினதியிரவிசேய் பார்க்கக்கூட
எந்தனுளளவுமட்டு மிருப்பனேமலடனாக 3

ஆறெட்டுக்குடையோன்சேர்ந்து வைந்திடமாகநிற்க
ஏறிட்டுமறையோனீசம் வேந்தனுமைந்தோன்சேர
கூறிட்டவுதயங்காரி குளிகனுங்கூடிநின்றான்;
மாறெட்டின்மதிசேய்சேர்ந்தான் மனிதனேமலடனவன் 4

இருமூன்றிற்குடையோனெட்டி லிருந்திடவிரவிகூட
வருமூன்றிரண்டிலெட்டோன் வக்கிரன்சேர்ந்துநிற்க
குருநாணிசமாகிக் கொண்டிருவுதயநீலன்
பருவானமதியும்பாம்பும் பத்திலுல்மலடனவன் 5

ஈரைந்திற்பாவியாகி யினியவர்நீசமாக
ஓரைந்திலுதயத்தானு மொருவெள்ளிமதியுங்கூடப்
பாரைந்திற்கேழிற்பாம்பும் பற்றியேநின்றானாகில்
ஆரைந்துதவமானாலு மவனுக்கேபுத்ரரில்லை 6

மூடவனுறைந்தில்நிற்க முற்பிறையுடனேபாவி
இடமதாயைந்தோனட் பாவினிக்குருவுடனேபாபி
திடமதாயுதயந்தன்னிற் சிதனுமேநின்றானாகில்
நடவதேபுத்திரருண்டா நசித்துடன்போமேசொல்லாய். 7

அஞ்சவன்பாவிசேரவதுதனிற்சுபரேநிற்க
மிஞ்சியகுருவும்பாபர் நடுவதில்மிகயோராகக்
கொஞ்சவனான திங்கள் குசனுடன்சேர்ந்துநிற்க
வஞ்சியேபிறக்கும்பிள்ளை வகையறமடிந்துபோமே 8

அஞ்சினிலலரிநிற்கவவர்க்குநாலைந்தோனாக
மிஞ்சினான்மந்தன்பூமன் மிகைத்தநாலரசேநிற்கத்
தஞ்சுதையத்திற்சோமன் தான்குறிநின்றானாகில்
இஞ்சிபோலுதித்தபிள்ளை யிறந்திடுநாசமாக 9

ஆறுநாலலரிமந்த னதற்குநாற்குருசெவ்வாயும்
வீறிநாலைந்தோனிற்க வேந்தற்குநாலேழாகத்
தூறிநாலுதயந்தன்னிற் சுபருமேனின்றாராகின்
மாறிலாவுதிக்கும்பிள்ளை மரணமாம்நாசமாக 10

மூணொன்றிற்சுங்கனிற்க முன்னவனீனமாக
வேணுமென்றரசனல்ல விடமதாய்நிற்கத்தானும்
பூணுகொண்டலரிகாரி பூமனுமுறவேயாகில்
வேணுமென்றாணும்பெண்ணும் விளைவதுமடியுந்தீம்பாய். 11

சென்மத்திற்பாபினிற்க சிதனனுடனேதீயர்
கன்மத்திற்பகையோராகக் கருத்துளோராறெட்டாகத்
தன்மத்திலரவனுஞ்சேர்ந்து தரைமகனஞ்சல்னின்றால்
துன்பத்திலுதித்தகாளை தோன்றியவன்றேநாசம். 12

பூரணபிலத்தினோடு புண்ணியமேலானாலுங்
காரணமானவைந்தோன் கனகனுமூடமானால்
கூரணகாரியாரால் [illegible]றியைந்தில்னின்றாராகில்
வாரணிதனத்தினாளே வருமந்தக்குழவிநாசம் 13

நண்ணியசுபரூபம்பாபர் நலந்தியர்கலந்துனிற்க
அண்ணியவருகில்ராசனவருடன்கலந்தேனிற்க
புண்ணியவைந்தோன்பாபி பிலவாறுயிருந்திட்டாலும்
னிண்ணயமானகாலை னில்லாதுகொஞ்சநாளே 14

அண்ணியலக்கினஞ்சோம னைந்திடமைந்தோராசன்
புண்ணியர்பார்வையில்லாப் போயிருந்திடமுந்தீதாய்ப்
பண்ணியபாவத்தாலே பாபரேமிகத்துனின்றால்
எண்ணொருநாள்சேயில்லை யேந்திழைமாதேகேளும் 15

வியாழமுந்திங்கள்கூடி வேறொருகிரகம்பாரார்
புயாகமாயைந்தினின்றூற் புத்திரநாசஞ்சத்ரு
னியாயமாய்ச்சுபரேயென்று னினைவதிலுரைக்கலாகா
தூயாயமாய்ப்பார்த்துச்சொல்லு தோன்றிடுங்குறிதப்பாதே. 16

அபுத்திரபாவம்

முற்றும்.

ஆக பாடல் - 300.

சகோதரபாவமறிய.

3911

மூணினிற்பாவியாக முன்பின்னோரத்தமிக்க
வாணுமேநவத்தில்மைந்தன் வக்கிரனவர்க்கேநாலாய்
காணவேசுபரில்லாமற் கடும்பகையாகிநின்றால்
சேணுமோரில்லாதாகிற் சகோதரமவனுக்கில்லை 1

இரண்டொருவிடத்திற்பூம ணிராகுவுமைந்தில்நிற்க
கண்டொருவுதயத்தானுங் காரியுங்கூடிநிற்க
நண்டிருமேணியோடே நாகமேகலந்துநின்றால்
விண்டொருதணியனாகிவிண்ணிணிலிருப்பன்மாதே 2

பொன்னவனெட்டில்நிற்கப் பூமனுஞ்சனியுங்கூட
விண்ணவர்காட்சியான வேந்தனுமூன்றோன்கூட
அண்ணவனரவங்கூடி யாறினிநின்றாராகில்
நிண்ணவனொருவனாகி நிலைபெறநிற்பன்மாதே 3

ஆறவன்மூன்றில்நிற்க வம்புலியுடனேபாம்பும்
கூரறியுடனேமூன்றோன் கூடியேயெட்டில்நிற்கக்
கார்கரிக்கேழிற்செவ்வாய் கருநாகங்கூடிநின்றால்
வேறொருதுணையில்லாமல் வீண்ணிணிலிருப்பன்மாதே 4

சுங்கனுடனேகூடி சூரியன்மூன்றில்நிற்க
அங்ஙனேயைந்திற்செவ்வா யதற்கேழிற்பிறையுதிக்க
இங்கையோருதயந்தன்னி லிருந்திடப்பாம்புதானுஞ்
செங்கரியுடனேமூன்றோன் சேர்ந்திடிலொருவனாமே. 5

திரிவிடமருவப்பாபர் திங்களுங்கூடிநிற்க
எதிரிடமரவநிற்க வேழ்மதிக்கேழிற்நிற்க
குருவிடமதுக்கேழாரல் குருமதிநாலேயாகில்
பரிதியுடன்மூன்றோன்கூடிப் பாலன்பின்னில்லைமாதே. 6

காரியுமாரல்கூடி கண்டொருவுதயமூன்றில்
சூரியனுடனேமூன்றோன் சுபருமேபாராதாகில்
வீரியவிடையினாகம் விண்மதிநாலேயாகில்
பாரிவனுதித்தபின்பு பாலனேயில்லைமாமே 7

அங்கிருமூன்றிற்பாப ரமர்ந்தொருசெவ்வாய்நீசம்
இங்கிருமூன்றோர்பாபி யிருபுறமிருந்தாராகிற்

செங்கருவரவுங்கூடி திவாகரனசிக்குநாலாய்
எங்கிருந்தாலும்பின்பு மினிசகோதரமேயில்லை. 8

இப்படியிருந்தபோது மிதிற்குருசுங்கன்கூட
நற்படிசோமன்புந்தி நலமுள்ளோர்கூடப்பார்க்க
சொற்படச்சுபர்நலத்திற் றேன்றிடுஞ்சகோதரங்கள்
மெய்ப்படநம்பவேண்டா மேலாகினில்லார்மாதே. 9

பூமர்க்குநாலிற்பொன்னும் புந்திக்குமேழில்மூன்றேன்
காமர்க்குமூன்றுநான்காய்க் கடுவெள்ளிக்கரிக்கேழாகில்
மூவர்க்குநடுமூன்றுக மூன்றினிலிரவிபாம்புஞ்
சோமர்க்குசேய்நாலாகிற் சொல்சகோதரமுமுண்டு. 10

ஆறினிற்சுபரிருக்க வதிபதியதிலேநிற்க
வேறொருபாபர்பாரா விருட்சிகனுட்சியாதி
ஈரரையரசனிற்க விவர்க்குநாற் சோமனுகி
மேலுரைசகோதரங்கள் மிகுதியாயனேகமுண்டு 11

ஓரிருவிடத்தாராட்சி யொன்றினிலரசன்சேர
பாரிவருடனேபாபர் பார்க்கவுங்கிட்டாராகில்
ஆறிருவிடமாய்நிற்க வாரலேசுங்கன்கூடி
வீறியசகோதரங்கள் வேண்டியதிரளாயுண்டு 12

நாலும்பின்னவனேயுச்ச நலமுளவைந்தோனுட்சி
சேலுளசெந்திவண்ணன் சிறுபுந்தியியாழுங்கூட
ஏலுளமூன்றிற்சோம னீராறிலலரிமந்தன்
மேலுடனின்றுனுகின் மிகச்சகோதரமேயுண்டு 13

ஒன்பதாமிடத்தில்ராச னொருவனுய்நிற்கத்தானும்
இன்பமாய்ச்சோமனூரா லிருந்தவர்லாபந்தன்னில்
துன்பமாய்ப்பாபர்சீச சுங்கனுமுதயநின்றால்
அன்பதாய்ச்சகோதரங்க ளனேகம்பேருண்டுமாதே. 14

ஆரனுமூன்ருன்வீட்டை யதுவிடஞ்சுபரேபார்க்க
சேரலாய்க்கூடிநிற்க சென்மாதிமதியமாக
வீறிலாதிருக்கப்பாபர் வேண்டியசகோதரந்தான்
மாறிலாதிருக்குமாதே மணிமுடிசேஷனுக 15

உண்டுபேர்மூன்றிற்செவ்வா யொருவனுயிவர்க்கேழ்மந்தன்
கண்டுபோஞ்சனிமூன்ருகிற் கனலவனேழேயானுல்
விண்டுபோங்கரிபாம்பானுல் விளைவதுமில்லைபின்பு
கொண்டுபோஞ்சகோதரத்தைக் குறியிதுகேளுமாதே 16

அத்துடன்போமேமூன்றி லாரலுங்காரிநின்ருல்
செத்துடன்போமேதம்பி செல்வரும்பாராருகில்
வித்துடனறுந்துபோமே வெண்கதிர்மூன்ருன்சேர்ந்தால்
பத்துடன்வருடந்தன்னிற் டலனிதுகுறிதப்பாது 17

நாசமாமூன்றினல்ல நற்குருசோமன்கூடில்
நேசமாங்குருவுஞ்சோம னின்றிடத்தீங்குண்டாகும்
பாசமாஞ்சுபசரயென்று பார்க்கவும்நம்பலாகா
மோசமாஞ்சகோதரங்கண் முடிவதுகுறிதப்பாது 18

சகோதரபாவம் முற்றிற்று.

ஆக பாடல்-318.

மாதுரு பாவமறிய

உதயநாள்சுபரிருக்க உத்தமருடனேநாலோன்
சிதையாமற்சோமனிற்கத் திவாகரன்கரிசேய்பாரார்
அதையாகக்குருநாலாகி லரவமுமதியைப்பாரார்
இதையாதநின்றுளுகி லெங்நாளுமப்பதமேமாதர் 1

பத்துநாலேழிற்பாப ரன்றியேசுபரிருக்க
மூத்துநாலோதும்பாக்கிய முன்னரசோனுங்கூட
எத்திநாட்களேயீராறி லிருந்தவனுட்சியாகில்
கொத்துபோல்மாதர்பிள்ளை குடிபோகமட்டுநிற்கும் 2

விடையும்நாலிருக்கவன்றி வெயிலவன்கரிசேய்பாரார்
குடையுளோனிருக்கவேழிற் குறுகியேசுங்கனுலில்
நடையுளோனுக்சமாகி நலம்பிறையுதயநிற்க
இடையுள்ளமாதேகேளு மிருப்பனேமாதர்நூறுய் 3

உதயனுலேழுபத்தோ ரொருமையாயிருகோணஞ்சேர
அதையவர்க்கேந்திரமாளு லந்தமாதாவின்சுற்றஞ்
சிதைவிலாச்சோமன்வீறிற் சேய்காரிபகலரவன்பாரா
விதையிலாதிருப்பன்மாதர் விண்ணினிளூறதாகி 4

மதியவர்பெருமையாகின் மற்றதீசகோளர்பாரா
சதிரதிலரசனிற்கச் சத்துருபார்வையில்லா
எதிரெதிர்நாலாய்நின்று லேந்திழைமாதேகேளு
விதியதினுயர்ந்துமாதர் விண்ணினிலிருப்பர்நூறுய் 5

சதிர்மதியிடத்தானேழோன் சத்தமஞ்சுபரேயாகிற்
கதிரரவிரவிசேய்க்கு கண்டவனிவரைப்பாரார்
அதிர்நவமாறெட்டாகி லந்தமாதாவின்சுற்றம்
எதிரொருகுறைவில்லாம லிருப்பனேவயதுநூறுய் 6

நாலுடனுலினல்ல நலமுள்ளோரில்லாதாகில்
ஏலுளநாலேழோனு மிருந்திடநீசமாகி

சேலுளமதியுமீன மாயினான்மாதேகேளு
பேருளவன்னைபின்பு பிழைப்பதுமில்லைகண்டீர் 7

பத்துடன்சனிசெய்தீயர் பாம்புமேநின்றாராகில்
இத்துடனாலேழோனு மிழிகுலமாயிருக்க
கத்துடனிருந்தநல்லோர் கனங்குன்றியத்தமிக்க
செத்துடன்போவளன்னை சீரணசந்திரனுமானால் 8

அன்னகர்மதிநாலாக வதற்குநாற்செந்தீவண்ணன்
இன்னகருதயங்காரி யிருந்திடிற்சுபரில்லாமற்
பொன்னவராலெட்டாகிற் போய்விடுமன்னைநில்லாள்
சொன்னகர்பெரியோரிந்த சோதனைகுறிதப்பாது 9

இந்தநாலேழும்பாபர்க் கினியவனீசமாகில்
மந்தனாருடனேசோமன் மனையவளத்தமிக்கில்
அந்தநாளரசராகி லலரியுமுதயநின்றால்
வந்தநாளன்னைதீங்கு வருமிதுகுறிதப்பாது 10

வருமதிநாலிற்கூட கொம்பனைபாளேகேளும்
குருமதுவன்னைக்காகா வம்சநாசமாகுந்
திருமதுமில்லைகண்டாய் செல்வரும்பாராதாகில்
கருவிதுதப்பாதாகுங் கண்டிடுங்குறிதப்பாது 11

பூமகனாவில்நிற்கப் புண்ணியர்பாராராகில்
ஆமவன்தனாற்சோம னதற்குநாலிரவினிற்க
சாமவனுதித்தபோதே சனியுமேயுதயமானாற்
போமதுவன்னைகூட பிறிவினையில்லாதாகி 12

மூவிருநான்கோர்கூடி முன்சதுரத்தில்நிற்க
ஈரிருசதுரத்தாரு மிருநான்கிலீராறுமப்
பாரிவர்க்காறெட்டாகப் பனிமதியரவங்கூடிற்
சூரியனாதயநின்றாற் சொல்லுமேமரணமன்னை 13

நலமகனீலன்கூடி நிற்கவேயதுநாலாகக்
சிலைமதனீனமாகிச் சீணமாய்நின்றானாகில்
நலமில்லாச்சுபர்பார்க்கில்லா தாயினுமாதேகேளுஞ்
சொலவிதம்வேறேயில்லை சுற்தமாயன்னைசாவள் 14

இரவிநாலிருக்கவேழி லேழ்மதிசனியுங்கூடப்
பரவிநாற்கேழிற்பூமன் பாம்புமேயுதயநிற்க
உரவிவாதிருக்கநல்லோ ரொருவரும்பாரூராகில்
அரமிலாதிருக்குமன்னை யன்றிரவதனிற்சாவள் 15

இதுவாகவிருக்கத்தீய ரிதற்குருசுங்கன்பார்க்க
மிதமாகச்சிறநோக்காடாய் மேதினியிருப்பாராகில்
அதுவாகவைந்தாருண்டி லன்னையுமரணமாவள்
பொதுவாகச்சுபரேகூடிற் போகுமெட்டாண்டிமன்னை 16

சுபர்பாவிகூடிநாலிற் சுத்தமாதிமதியோடாறில்
அவர்கூடிசுத்தநாலோ னரவழுங்கூடிநிற்க
இவர்சார்பினில்லாதாகி லிருந்திடிலுதயத்தானும்
நகர்சேம்பினரசேகேளு நானுங்கிலழியுமன்னை 17

சுத்தமும்பாவிகூடிச் சூரியனுடனேயில்லாப்
பத்துமுன்றுலுமேழிற் பனிமதியொருவனில்லா
அத்தமுன்னன்குநாலோ னாட்சியில்லாமனில்லா
நித்தமுங்கன்னியாகி நெடுங்காலமிருப்பளன்னை 18

மாதுருபாவமறிதல் முற்றிற்று.

ஆக பாடல் 336.

பிதாவின் பலன்.

ஒன்பதுக்கொன்பதைந்து மொள்ளிமீயானரசனிற்க
இன்பதிக்கினியோரோடே யிந்துவின்கூடப்பார்க்கில்
தன்பதிக்கிரணனுட்சி தானுமேலாபமாகில்
ஐம்பதுக்கைம்பதாகி யவன்பிதாவிருப்பனூறுய் 1

இரவியுமுச்சமாகி யிருகோணருமாட்சியாகப்
பரவியவிருகோணந்தன்னிற் பருமதியாசனிற்க
அரவுசேய்முடவன்புந்தி யாறெட்டுப்பனிரண்டாகில்
திரவியமுடையோனுகித் தேங்கியேயிருப்பஞசான். 2

பகலிருபக்கன்சுங்கன் பருமதியரசனென்பான்
இகலினியோனும்ராசற் கேழிடமாகிநிற்க
அழலவர்க்கேழிற்காரி யரவுசேய்நில்லாதாகிற்
சகலமுமுடையோனுகச் சாவன்றிபிதாவுநிற்பன். 3

ஐஞ்சொன்பதுள்ளோருச்ச மாயிரங்கதிரோனட்பாய்
இஞ்சொன்மாமறையோன்சுங்க னிவர்க்குமேநாலேழாகிற்
பஞ்சமாபாபிநீலன் பாஷ்கரர்க்கேழைந்தில்லா
செஞ்சோமன்கோணநின்றுற்றீர்க்காயுள்பிதாவுக்குண்டு 4

எட்டொருவிடமும்வீட்டோ னிரவியசுபரேபார்க்க
மட்டிருகரிசேய்பாம்பு மாளிகைக்காறெட்டாக
விட்டொருவுதயந்தன்னில் வெள்ளியும்புதனுநின்றுற்
பொட்டெனப்பிதாவின்பாக்கியம் போகாதுகேளுமாதே. 5

ஆரியன்பிலத்துநிற்க வைந்தொன்பானதினில்ராசன்
சூரியனுடனேபுந்தி சுக்கிரன்கூடநிற்கக்
காரியுமாரல்பாம்புங் கலந்தேழிலுஷினிற்கா
மாரியுமேகம்போலே மலாந்திடும்பிதாவின்காயம் 6

சதிரெதிராசன்சோமன் சத்தமமிரவிநிற்கக்
கதிரிருபக்கமாகக்கணக்கனும் வெள்ளிநிற்க
எதிரொருபாபர்பாரா திருக்கினுமாதேகேளும்
பிதிர்வெகுயோகமாகிப் பேருளோனுகிவாழ்வன். 7

கனவனுடனேபுந்திக் காரிசேய்நாலேழன்றிற்
புனனவமிடத்தான்சோமன் பொன்னுக்குநாலேழாகில்

அனல்வெள்ளிக்கைந்தோ னேழாகினுமாதேகேளுஞ்
சுழல்கொண்டுபிதாவின்யோகஞ் சொல்லவுமனேகமுண்டு. 8

வேறொருகுறைவில்லாமல் வெள்ளிபொன்னவமிருக்க
தானொருமறைவில்லாமற் றனியுனாயிரவிலாபம்
ஆறொருகளையினூடே யம்புலியுதயநிற்க
வீறிலாப்பாபர்பாரா தாயினும்பிதாவின்யோகம் 9

தனமதிற்பாபரன்றித் தலமுள்ளோரிருக்கப்பார்க்க
மனமதினலத்தோனல்லோர் மகிழ்ச்சியாய்க்கூடிநிற்க
வனமதின்மிருகமேறி வல்லவன்கனலியாகில்
இனமதில்மிருகுதியாக விருப்பனேபிதாநூறாக 10

ஆரியனீசமாக வந்தொன்பதாறுநிற்க
காரியோனவத்தோன்கூடக் கணக்கனும்வெள்ளிபாரார்
வீரியவிடையினாகம் வெண்கதிர்க்கேழயாகிற்
பாரிவனுதியாமுன்னே பரமபிதுராகிநிற்பன். 11

செங்குருவெட்டினிற்கத் திவாகரன்பனிரண்டாக
அங்கிருசனியுங்கூட வாரனுநவத்தோன்சேர
இங்கொருநவத்திற்பாம்பு மிரவிக்கேழ்மதியுமானால்
பின்வருமுதியாமுன்னே பிதிர்மடிந்திருக்குமாதே 12

வெள்ளியோனத்தமிக்க வேந்தனுநீசமாகத்
துள்ளியேவதற்கேழ்செய்வாய் சூரியன்புதல்வனிற்க
தெள்ளியேநவத்திற்பாம்பு திவாகரனவத்தோனாலாய்
அள்ளியகுழவிமுன்னே யவன்பிதாமரணமாவன் 13

பொன்னவர்க்கேழிற்பூமன் பொருந்தியநவனத்தோனத்தம்
நின்றவர்மூன்றைந்தாகி நீலனுமிரவிகாலாய்
என்னவனுதித்தபோதே யிருந்திடிலுதயம்பாம்புங்
கொன்றனன்பிதாவைமுன்னே கொடுங்கணைமுகத்தினாளே. 14

நீலனுமிரவிநாலாய் நிற்கினுநவத்தோன்பூமன்
மாலனுமதிக்குநாலாய் மந்தனுக்கேழாமாகிற்
காலனும்பிதாவைத்தேடுங் கனகனும்வெள்ளிபாரா
பாலனும்பிறக்கின்முன்னே பரகதிபிதாவேபோபன் 15

இரவிமுன்னீலன்பின்சே யிருநான்கில் வெள்ளிபொன்னும்
அரவுமோர்நவத்தோன்கூடி லந்தநீலற்கேயேழில்
பாவியசோமன்புந்தி பாம்புக்குநாலையாகில்
மருவருங்குழவிமுன்னே மாண்டிடும்பிதாவுமில்லா 16

மதியரசானோன்கூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
மிகுதியோரவரைப்பாரா திருக்கினுமாதேகேளுஞ்
சதியவர்செய்யுந்தீமை சத்துருபிதாவுக்காகா
விதியதுமுடியுந்தப்பா குறியதுமென்றுந்தப்பா 17

மந்தன்சேய்க்கிருவர்கூடி மகிழ்ச்சியாய்நவத்தினிற்க
இந்தவரவரைப்பாரா திருந்தவரவரேயானால்
அந்தமாய்ப்பிறப்புநோக்கி லப்பனேமடிப்புண்டாகிற்
சொந்தமாய்ப்பிதாவைக்கொல்வர் சொல்குறிதப்பாமாதே 18

நாலுபேர்பாபர்கூடி நவத்தினினின்றாராகிற்
கோலுயர்பெரியோர்நல்லோரர் கூடியேபார்க்கிலன்றில்
வாலிபன்றிரும்பிவந்த வண்சேய்முன்பிதாவுங்கண்டம்
ஆலுகந்தமூதமாதே யக்குறிதப்பாதாகும் 19

நவத்திடங்கரிநாலாக நாகமுமிரவிநாலாய்
செவித்திடநவத்தோனிற்குஞ் செவ்வாய்க்குநாலேயாகில்
மதித்திடநல்லோர்பாராதாயினுமாதேகேளும்
குதித்திடும்பிதாவுக்கண்டங் கொண்டுபோங்குறிதப்பாது 20

ஏழிடமுதயம்பாபி யிருக்கினுநல்லோரன்றி
தாழ்வுடன்கங்கனிற்க சனிக்குநாலாகிநிற்க

சூழிடவேழோன்பக்கல் சூரியனாலகூடில்
வாழ்வுடன்குலைந்துநிற்கும் வருமிதுகுறிதப்பாதே 21

பிதுர்பாவகம் - முற்றும்.

ஆக-செயயுள்-357.

களத்திர பாவகம்.

மந்தனுர்க்கேழிற்சுங்கன் மனையவனீசமாக
வந்தநாளுடையோன்சோமன் மனைக்கெதிர்புந்தியாக
இந்தவேழுடையான்சேய்க்கு மிரவிக்குநாலாய்நின்றுற்
பந்தமாய்ச்சொல்லுமாதே பலியாதுகளத்திரநாசம் 1

குருமூடமாகிநிற்கக் குசனுமேவேழிற்சேர
அருகோடரவத்தினோடே யந்தேழுக்குடையோன்கூடப்
பரிவாடரவத்தினுலாய்ப் பாங்குள்ளசுங்கனிற்க
கறிகூடநாலேயாகிற் களத்திரமறுந்துபோமே 2

உதயமேழுடையான்கூட வொருமையாய்ச்சனிக்குநாலாய்
மதியமேழிடத்தில்வேந்தன் மனைக்குநாற்சுங்கனிற்க
சிதையவேயுதயஞ்செவ்வாய் சேரவேசுபர்பாக்கில்லார்க்
கனுதயதாய்முடியும்பின்னே களத்திரமறுந்துபோமே 3

பெற்றவனீசமாகப் பின்பேழுக்குடையோனீசங்
கொற்றவன்பனிரண்டாகக் குசன்வெள்ளிகூடனிற்க
ஒத்தவனுதயங்காரி யொருபகலரவுநின்றுற்
செத்திடுங்களத்திரமெல்லாஞ் சீரணச்சந்த்ரனுல் 4

தனமவர்குன்றிநிற்கத் தரியிலாவேமோனீச
மனதவன்காரிகூட மங்களசுங்கன்சேர
இனமதன்பகலரவங்கூடி யிவர்நடுவாகநின்றாற்
சினமதுவில்லாதாகுஞ் செத்திடுங்களத்திரமெல்லாம் 5

நீலனுமாரன்கூடி நிற்கவேவேழிற்றானுங்
கோலரவிவிரசுங்கன் கூடியேநின்றானாகின்
மேலெனுமேமோனீரா றிருக்கினுமாதேகேளுங்
காலெனகளத்திரங்கள் கருவறுங்குறிதப்பாது 6

குருமதிகூடியேழிற் கோலமாய்நின்றாராகின்
மருவிருசுபரேயென்று மகிழ்ச்சியாய்ச்சொல்லவேண்டாம்
வருமதுகளத்திரவானி வங்கிஷநாசமாகும்
திருகதுமில்லைகண்டாய் தெரிந்துரைகுறிதப்பாது 7

வெள்ளியுமீனமாக வியாழமுமேழுக்கேழாய்ப்
பள்ளியானரவங்காரி பொருந்தியேயிவர்க்குநாலாய்
தெள்ளியவுதயஞ்சேய்க்குச் சீருடனிரவியேழில்
துள்ளியேநின்றாராகிற் சொன்மனையறுந்தப்பாது 8

ஏழவனுட்சியாகி லிருபுறம்பாபியாகத்
தாழ்விலாச்சுங்கனிற்கத் தபனவனுடனேகூட
ஏழ்மதியரசன்புந்தி யிவருமேபாராராகில்
வாழ்வுடன்குலைந்துபோமே வருமிதுகுறிதப்பாது 9

சுங்கனார்சுபமிருக்கச் சுற்றியேபாபர்நிற்க
அங்கனையிரவியோடே யங்கேழுக்குடையோர்கூட
இங்கையோர்சுபரும்பாரா திருக்கினுமாதேகேளும்
பங்கமாங்களத்திரவானி பலிக்குமேகுறிதப்பாது. 10

சுங்கனேரேழோன்றானுஞ் சுகமாகநின்றாராகில்
எங்கினுமிவரைநல்லோரிருப்பிடம்பார்வையாகில்
அங்கொருபாபர்கூடி யவர்பார்வையில்லாதாகிற்
பங்கமில்லாமற்றேவி பதிவிரதையாகிநிற்பள் 11

ஏழிடஞ்சுங்கனுரோ டிருந்தவர்சுபரேயாகில்
தாழ்வுடனிவரைப்பாபர் சற்றுமேபாராராகில்
வாழ்வுடனுயர்ந்துநின்று வருவதுகளத்திரமொன்று
நீழ்புகழ்குடும்பதேவி யாகியேநிற்பன்மாதே. 12

ஏழிருபுறமுநல்லோ ரிருந்தனர்பாபியன்றி
சூழிருபுறமுஞ்சுங்கன் சுபர்பார்க்கவிருக்கக்கூட
வாழிருவேழோனைந்தில் வறுமையாய்நின்றாராகில்
தாழ்வொருபயமுமில்லாத் தழைத்தொருமனையாணிற்பாள். 13

ஆட்சியாய்ச்சுங்கனிற்க வந்தேழுக்குடையோனட்பாய்
சாட்சியாயரசனேழிற் சசிக்கேழிற்சுங்கனின்றுற்
சூட்சியாய்ச்சுபரைப்பாபர் சூழிடவாறெட்டாகில்
ஆட்சியாய்க்களத்திரதேவி யனேகநாளிருப்பர்மாமே 14

குடியவனுட்சியாகக் குருவுதயத்திநிற்க
அடியவனுச்சமாகி யவர்க்கேழிற்பிறையுதிக்க
வெடியவன்காரிசேய்க்கு விண்ணவரிவரைப்பாரார்
கொடியவனிற்பனூறுய்க் குறியிதுதப்பாமாதே 15

ஒருபிறைமதியனிற்க வொருபத்தில்குருவேனிற்க
குருவரைநாலிற்சுங்கன் கொம்பனைக்கேழேயாகில்
திருகொருவாராற்பாபர் தீயருச்சமாட்சியாகில்
மருவொருகளத்திற்பாக்கிய மகமேருவாகினிற்கும் 16

தனமேழுடையோர்நட்பாய்த் தனியிராசுங்கன்புந்தி
இனமேழுவிடத்துநாலா யிருக்கினும்பாபர்பாரார்
மனையேழில்குருவேனிற்க மதியுமேயுதயமானுற்
கனமேழுமேகம்போலே களத்திரங்கவிந்துனிற்கும். 17

சோதிபோல்வெள்ளிவீறிச் சூரியன்முன்னேனிற்க
பாதியேழுதயந்தன்னிற் பண்டிதனரசன்சேர
நீதியோர்நீதிமந்தன் னிலமகனிரவிபாம்பு
ஏதிலுமில்லாச்சோக மிருக்கினுங்களத்திரமெல்லாம். 18

வருமுதைதனத்தினேழோன் வங்கிஷநலமேயாகக்
குருதிங்கள்வெள்ளிபுந்தி குலமுள்ளோர்கூடப்பார்க்க
கரிபூமனிரவிபாம்பு காணுமலொதிங்கினின்றால்
மறுமணமொன்றேயாகு மகமேருவாகிநிற்கும் 19

களத்திரபாவகம்-ம்-முற்றிற்று.

ஆக பாடல் 376

நிறையாயுள் பாவகம்,

சனிக்கெட்டிற்பாபரில்லாச் சலிப்பிலார்கூடப்பார்க்க
இனிமட்டிலிவர்க்குநாலா யிருந்திடாப்பாபரன்றி
முனிதொட்டுக்கெட்டுக்கெட்டின் முன்சீதளநின்றாராகிற்
செனித்திடவருமோர்பாலன்சிரஞ்சீவியாகிநிற்கும் 1

எட்டுடினெட்டினிற்க விருபக்கஞ்சுங்கள்ராசன்
விட்டிடனுதயஞ்சோமன் வெள்ளிக்கேழாகிநிற்க
மட்டுடன்சனிக்குநாலில் மணமகனிரவியன்றிக்
கட்டுடனுதித்தகாளை கண்டிடாதெமபுரத்தே 2

வீறுமோர்சனிக்குநாலில் வெண்கதிர்பூமனில்லா
மாறுமுக்கோணகேந்திர மதியுமேசகடமன்றி
ஆறுமிக்காறரண்டோ னவன்சுகமானால்மாதே
ஏறமெட்டிரண்டுபத்து மிருப்பனேகுறிதப்பாது. 3

நாலுகேந்திரத்துமன்னர் நலமாய்முக்கோணஞ்சேர
ஏலுகந்திருக்குநீல னிலர்க்கேறிற்றீயோனில்லா
மேலுவந்தணைத்தோன்வீறி மேருவிலெட்டோனானால்
ஆலுகந்தமுதமாதே யவனூறுவயதுண்டாவன் 4

கரிக்கொருவீனமில்லாக் கனலவன்பார்வையவிறி
மரித்தொருவக்கிரமன்றி மன்னவன்பார்வையாகி
குறித்திருவுடனேசோமன் கூடவேயுதயநிற்க
பறித்தவர்க்கெட்டுக்கெட்டோன் பருநலமாறுனூறே 5

யதிமதிவிதியுமல்ல பரபரங்கிஷமேயாக
விதிமதியின்னிடத்தா ரிவருமேசுபரேசேர
விதிமதிக்கேழுநாலில் வெய்யவன்பூமனெண்ணில்
சதிபதிமாதேசேனு சஞ்சீவிச்சிலைபோலாமே 6

நீலனுக்கெட்டிற்பூம னிறைமதிக்கெட்டிற்புந்தி
காலனுக்கிரவிதீயுங் காமனுக்கொருநால்வேதன்
நூலனுக்குதயமாக கோயில்லாதிருந்தாராகில்
பாலனுக்கொருநூறுகப் படருமேயாயுள்யோகம் 7

எட்டவனிருப்பிடத்துக் கிருபக்கஞ்சுபரேநிற்க
மட்டிலாச்சனிக்கேநாலில் மன்னவன்வெள்ளிநிற்க
விட்டிடாப்பிறையுயர்ந்து வெய்யவர்க்காறிலாகில்
இட்டமாயிருக்கிற்காளை யிருப்பனேவயதுண்டாகி 8

நிரையாயுள்பாவம் - முற்றும்.

ஆக பாடல் - 384.

அரிட்டமரிய.

விதிபதிமதியுநீசமன்றிவெய்யவன்கூடப்பார்க்க
அதின்மதிகுன்றிநிற்க வதற்குநாச்சனிசெய்புந்தி
மதியதின்குருநோக்கில்லா மந்தனும்வெள்ளிகூடில்
சதிபதிமாதேகேளுஞ் சாவதுவுடனேயுண்டு 1

உதயத்துக்கெட்டில்மந்த னொருவனுய்நிற்கத்தானு
மதியத்துக்கெட்டிற்பூமன் மன்னவனிவர்க்கேழாக
அதையொத்துவிரவிநின்றே யதற்கேழ்நாள்மந்தனுகில்
விதியற்றுநில்லாதாகும் விளையுமேதீங்காய்மாதே 2

உதித்தெட்டுக்கெட்டின்மந்த னிரவியும்பாம்புநிற்க
மதித்தெட்டுக்கெட்டினல்ல மன்னவன்பூமன்சேர
கதித்திட்டுச்சுங்கன்புந்தி காணவுமில்லாதாகில்
விதித்தெட்டுநாளுநில்லா விளையுமேதீதாய்மாதே. 3

அருக்கனுக்கெட்டோன்மந்த னமர்ந்திடனுதயம்பூமன்
இருக்கவுமிவரைநல்லோ ரின்பமாய்ப்பாராராகிற்
பருக்கவேசோமனன்றிப் பாம்புடனின்றுராகில்
உருக்கமாயுதித்தகாளை யொருநாளுநில்லாமாதே 4

நீலனுரதற்குநாலி னின்றிடவாரல்தானுங்
கோலமாய்த்தீயர்நின்ற குடிமனையதற்குநாலாய்ப்
பாலராய்ப்பிறக்கினல்லோர் பார்க்கவுங்கூடாராகில்
ஏலவார்குழலாய்கேளா யினியொருநாளுநில்லா 5

ஒன்பதுபேருநின்ற நிலையதிலொருமையில்லா
துன்பமாயெட்டுக்கெட்டாய்த் தோன்றியேநின்றுராகில்
இன்பமாயாட்சியுச்ச மிருக்கினுந்தீமையாகு
நன்பதங்கொடுப்பதில்லை நஷ்டமாமுகித்தகாளை 6

ஆட்சியாயிருப்பிடத்துக் கவர்பின்புநால்வர்நிற்க
சாட்சியாய்க்கேந்திரகோணஞ் சரியவர்நின்றிட்டாலு
மோட்சமுண்டென்றுசொல்ல மொழிகின்றவாறுதப்புஞ்
சாட்சியாய்ப்போமே காளைசஞ்சரித்திருக்காமாதே 7

பெரியநற்கெட்டில்மைந்தன் பெரியசோமர்க்கேழ்புந்தி
அரியவர்க்கெட்டிற்பாம்பு மவ்வெள்ளிக்கெட்டிற்பூமன்
நெறியதாயாட்சியுச்சம் நிற்கினுஞ்சுபமேயில்லை
சரியதாயரிட்டமானாற் சாவதுநிசந்தானுண்டே 8

பறித்தலக்கினத்துக்கிரு பக்கமேபாபிநிற்க
மறித்துநின்றிடவலத்தின் மனேபினிற்பாயியாகச்
செனித்தவர்க்கேழிற்பாபி சென்மாதிபாபியாகிற்
குறித்திவராட்சியுச்ச மாகிலுங்கொடுபோஞ்சீவன். 9

விதித்தவனீனமாக வெண்கதிரேழினிற்க
மதித்தவனத்தமிக்க மங்களனிவர்க்கேழாக
பதித்தவன்பகையேசேரப் பாஸ்கரன்மகனேழாகில்
எதிர்த்தவனின்றாகி லேந்திழைமாதேசொல்வர் 10

அரிட்டம் - முற்றும்.

ஆக பாடல் 394.

தனமறிய.

தனபாக்கியலாபமானோர் தாழ்விலாச்சுபரேசேர
மனேபோக்கியன்றிநல்ல மனேயாட்சியுச்சமாக
இனசவுக்கியமில்லாப்பாப ரிவரையேபாராராகில்
வினவிக்கேண்மாதேபாக்கியம் வேண்டியபொருள்தானுண்டே. 1

கன்மாதிமுன்பின்னேனுங் கலந்துடன்றனமேசேர
சென்மாதிதனத்தோன்கூடிச் சேர்ந்துடன்லாபஞ்சேர
மன்மாதிலுதித்தோனீலன் மனேயீராறிரவிபாரா
பெண்மாதின்மாதேகேளாய் பெரியதாயதன்மேல்வாழ்வன் 2

தனத்தவனிடத்தான்லாபத் தனியனுயிவர்க்கேழ்பொன்னுஞ்
சினத்துடன்லாபமானோன் சென்மாதிதனமேழாகக்
கனத்துடனிரவிபூமன் காரியுமரவநோக்கா
மனத்திடமாகிநின்றால் மகாமேருகிரிபோல்வாழ்வன் 3

உத்தமனுதயங்கூடி யுறுஞ்சத்தமவர்க்கேழ்நிற்க
நித்தமன்மனையோன்கூடி நிற்கில்கொற்றவர்க்கேழாகில்
இத்துடன்சனிசேய்தீய ரிரவிபாம்பிவரைப்பாரா
பெற்றவள்றனமேனித்தம் பெருமையாய்ப்புவியில்வாழ்வன் 4

சுபர்கோணகேந்திரர்க்கேழ் சுற்றியேபாபரன்றி
அவர்க்கோணகேந்திரமானோ ரம்மனைசுபரேசேர
இவர்க்காரியாரல்தீயு மிருந்திடமீராறாகில்
எவராதில்மரிப்பானாலு மேந்திழைதனந்தானுண்டே. 5

தனமதுபாக்கியலாபந் தலைவருமிருப்பிடத்து
மனமதேயைந்திலாறில் மந்தனுநாலேழாகில்
இனமதுசுபர்நோக்கில்லா திருக்கினுமாதேகேளாய்
குணமதுதனமேநாசங் குறியிதுதப்பாதாமே 6

பத்தாதரேண்டேழாண்டோன் பாஸ்கரனுடனேகூடின்
மற்றதோரீராறெட்டோர் மனையதிற்கூடினாலுஞ்
சத்துருவுடனேகூடிற் சனிக்குநால்நீசமாகின்
மித்துருபார்வையன்றி மிகுதியுந்தனமேநாசம் 7

அஞ்சுமூன்றெட்டிற்காரி யாரலுமிரவினிற்க
நஞ்சுபொன்சுங்கன்புந்தி நன்மதியிவரைப்பாரார்
செஞ்சுடர்க்கிரணன்பக்கல் சேர்ந்துடனுதயனின்றால்
மிஞ்சிடாப்பாக்கியமில்லை மிகுத்திடும்வறுமைதானே 8

எட்டொருமிரண்டிலாடா மிரவியுங்காரியாரல்
மட்டிருவாறோரெட்டில் மதிகுருசுங்கனிற்க
விட்டொருவிரவிக்கேழில் விடையுமேயுதயனின்றால்
இட்டொருநாளுநில்லா திவன்றனநாசமாமே 9

உதயமூன்றெட்டிற்பாப ரோங்கிடலாபமுன்பின்
பதியவேமுன்பின்பற்றிபாப ரோங்கிடலாபமுன்பின்
மதியுமேயீனனாகி மனமடிந்தீரானாகிற்
சிதையுமேதனமுதாசஞ் சீர்கேடனாகிவாழ்வன் 10

தனத்தினாலிரவினிற்கத் தரைமகனதர்மமானால்
செனித்துநால்மந்தனாகச் சென்மாதிக்கொருநால்புந்தி
மனத்தினாலரவனிற்க மந்தனுக்கொருநாலாகில்
இனத்தினால்தனமேநாச மிருமூன்றிற்சுங்கனானால் 11

தனமறிதல் – முற்றும்.

ஆக பாடல் 405.

யோகமறிய.

பாம்புடன்சுபர்மூன்றுக்கு பக்கமீர்சுபர்கணிற்க
ஆமுடவனுமேனின்ற வதற்காறிலைந்திற்சேய்க்கும்
போமிடமதிற்குநாலிற் பொன்னவனுண்டானாகிற்
காம்பிடமுலையினாளே கரிநரயோகமுண்டே. 1

மதினின்றவிடத்துநாலில் மன்னவனதுநால்சுங்கன்
விதினின்றவிடத்துக்காறில் வெண்கதிர்பூமனிற்க
பதியாயின்னிடத்தார்தாமும் பகர்மதிநாலேழாகிற்
குதிகொண்டுநரயோகமுண்டு கொடுங்கணைமுகத்தினாளே. 2

ஈரைந்துதலத்தோனோடே யிருலாபமானோர்சேர
ஓரைந்துநாலேழோனு மொருமையாய்க்கூடிநிற்க
பரைந்துவிடத்திற்சோமன் பறித்தீவனுடனேகூட
முவைந்தோரிடத்தோன்லாப மாயினால்யோகமுண்டு 3

செனித்தலக்கினாதிநல்ல சென்மாதிகூடப்பார்க்க
பனித்திடமதிக்குமூன்பி னடுப்பாதியினின்றாராகிற்
பனிக்கொடியிரவிபோலப் பாராளயோகமுண்டு
இனிப்பொருள்சகலயோக மேந்திழைமாதேயுண்டு 4

உதித்திடவொருவனிற்க வொருமூன்றிற்கிரகமுன்னே
கதித்திடப்பின்னேநாலில் கிரகமுங்கலவாய்நிற்க
செனித்தவத்துடனேசிங்கஞ் செகமெலாமாளும்யோகம்
விதித்திடமுண்டுபாக்கியம் வேண்டியசிவிகையேறும் 5

சுந்தரிருப்பிடத்துச் சூழ்கின்றோர்முன்னாற்பின்னால்
வந்திவரெதில்லாமல் வலமிடஞ்சூழ்ந்துநின்றால்
இந்திரவிமானம்போலே யிருக்குமேசிவிகையோகம்
கொந்தலர்குழலினாளே குறியிதுதப்பாமாதே 6

மதிக்குமுன்பின்னேழ்வீட்டில் மற்றொருகிரகமில்லா
விதிக்குவார்தர்மகர்மம் வீறிலாதிருநாலாறில்
பதிக்கொருகிரகமாகிற் பாராளயோகமுண்டு
இதற்கொருகலனேயில்லை யேந்திழைமாதேயோகம் 7

அம்புலினின்றவீட்டுக்கா றெட்டேழ்கிரகநிற்க
நம்புவியாண்டளப்பா னடுமனையேழிளிற்க
சொம்புடனாரவங்கூடச் சூரியனாறெட்டாகில்
இம்புவியாள்கன்கண்டா யிதுகுறிதப்பாமாதே 8

இந்துவுக்கைந்திற்கோள்க ளிருந்திடிற்பாக்கியமட்டில்
சந்துவுக்கேழில்மன்னன் றனியனாய்நின்றானாகில்
வந்திடும்யோகமில்லா வங்கிஷம்விர்த்தியாகும்
ஐந்திருபத்துமட்டு மவனியுமாளும்யோகம் 9

காமனாரிருந்தவீட்டான் கண்டிடி லுதயத்தேழிற்
சோயனார்க்குதயோனேழிற் சுரர்குருகூடநின்றாற்
பூமனார்க்கறுதியாகும் பொன்னவர்க்கேழ்நாலில்லா
பாம்புநாற்சுங்கன்கூடப் பத்துநால்யோகமுண்டு 10

வெள்ளியும்வியாழஞ்சோமன் வேறொருகிரகங்கூட
தெள்ளியமூன்றுபேருஞ் சீருடன்மூவைந்தானால்
ஒள்ளியதனமுமுண்டே யோங்கிடுமிராசயோகம்
அள்ளியவமுதமாதே யரசாளயோகமுண்டு 11

குருமதிநாலாய்நிற்கக் குணமுள்ளவெள்ளிக்கேழிற்
பருமதிநாலேயானாற் பாக்கியவேணதுண்டு
திருகதுமில்லைகண்டாய் செல்வமுமியோகமுண்டு
வருவதுசிவிகையோகம் வையகமாளுமாதே 12

ஏழுடன்மதியுநிற்க விகினியவனுதயஞ்சேர
வாழுமோர்பாக்கியன்சுங்கன் வருமதிலாபம்பொன்னுஞ்
சூழ்மதிற்பாபரன்றிச் சுத்தமாய்நின்றாராகில்
தாழ்வொருநாளுமில்லா தழைத்திடுஞ்சிவிகையோகம் 13

சந்திரர்க்காறிற்புந்தி சலிப்பிலாவரசனேழிற்
சுந்திரர்க்கெட்டிற்சுங்கன் சூரியன்கரிசேய்கூடா
வந்திவர்தனியேநின்றால் வருமந்தராசயோகம்
உந்திவன்சிவிகையேறு மோங்கிடுமாதேயோகம் 14

சிதனிருந்தவ்வீட்டானுஞ் சிந்தையோர்க்கேழேயாக
மதனிருந்தவ்வீட்டானு மந்திரிக்கேழேயாகிற்
பதவிதயோகபாக்கியம் பருப்பதம்போலேநிற்கும்
இதமுளமாதேகேளா யேறுமோராளை யோகம் 15

யோகமறிதல்.

முற்றும்.

ஆக-பாடல்—420.

தரித்திர யோகமறிய.

நண்டவன்குறுகினிற்க நடுமனைநீலனிற்க
உண்டுபொன்விரையமாக வோரேழிற்றீயானிற்க
ரெண்டவனெட்டினிற்க ரெத்தமேனியனுங்கூட
விண்டுமேலாபமாறில் விரையமாமியோகமில்லை 1

தனலாபபாக்கியமானோர் தனியராயீராறெட்டிற்
குணமிலாரீராறெட்டோர் குறித்தனலாபபாக்கியம்
இனமதிலொருவராகி லிருந்திடிலியோகமில்லை
மனமதிற்றுயரமாகி மண்ணினிலிருப்பான்மாதே 2

வீரியமந்தன்கூடி வெண்கதிர்நாலேயாக
பாருவையோனுக்கேழிற் பாராளுமரசன்சுங்கன்
சூரியனாலிற்பூமன் சுத்தமரய்நின்றாராகிற்
கூறியமதியும்பின்னே குறுகினில்யோகமில்லை 3

அரவுமேசனிக்குநாலா யந்தணனிரவிகூட
மறையுளோன்புதர்க்குநாலா மசுரமந்திரிசனிக்கேழ்
திறமுளவுதயத்தானுஞ் செவ்வாயும்விரையமானால்
குறையுளோனாகிவாழுங் கொடுங்கணைமுகத்தினாளே 4

விரையாதிலாபமாக வெண்கதிருடனேசோமன்
மறையோனும்விரையமாக வசுரமந்திரியாறெட்டாக
பிறையோனுஞ்சனிக்குநாலிற் பெரியபாம்பூமன்கூடில்
னிறையாகயோகமில்லை னிற்பனேபுவியின்மாதே 5

வில்லவனெட்டினிற்க விரையனுமுதயமாக
நில்லனுமதியுஞ்சின னிறைதனலாபமானோர்
வல்லவனிரவிகூடில் வகையறத்தனமேநாசம்
நல்லதுமில்லைமாதே நலங்குன்றுமியோகமில்லை 6

விதித்தவனுதயநிற்க விரையனுமிலாபமாக
உதித்தவனெட்டினிற்க வொருபிறைசனிக்கேழாகில்
செனித்தவனுடனேழ்வேந்தன் செவ்வாய்க்குநாலேயாகிற்
கனித்தொருநாளுமியோகங் கண்டிடாதறியுமாதே 7

யோகமேயில்லைகேளாயோருநரன்கிற் சனிசெவ்வாயும்
நாகமேகலந்துநிற்க நண்டவனீனமாக
வேகமாய்ச்சுங்கன்பொன்னும் வேந்தனுக்கேழேயாகிற்
போகமுமியோகமில்லை பொல்லாதுகேடுமாதே 8

தரித்திரயோகமறிதல் முற்றிற்று.

ஆக பாடல்-428.

ரோக மறிய.

செதித்தவன்மதியுநல்ல சேர்ந்திடஞ்சுபமேயாக
விதித்தவனெட்டாகில் வெள்ளிபொன்னுதயமானாற்
குதித்தொருநாளும்ரோகங் கொண்டிராதலறியோடும்
பதித்தவனுடனேசோமன் பற்றினல்ரோகமில்லை 1

உதிததலக்கினத்துக்கோ ரிருபக்கநல்லோராக
மதித்தவத்திடத்தினல்லோர் மன்னவன்பார்வையாகி

குனித்தவப்புறத்தையோடுங் கூப்பிடும்ரோகம்சில்லா
செனித்திடாதிருந்தாற்சுங்கன் சோரதுரோகந்தானே 2

மதிக்கிருபக்கநல்லோர் மன்னவனேழினிற்க
உதித்தொருவிடத்திற்சுங்க னொருவனுய்நின்றாகிற்
பதிக்கொருரோகமில்லை பண்டிதனுகிநிற்பன்
இதற்கொருரோகமில்லை பண்டிதனுகிநிற்பன் 3

உதைபதிமதியைநல்லோ ரோங்கியேபார்க்குமாகில்
இதையிருபக்கநல்லோ ரிருக்கவும்பாபரன்றி
அதையதிபதியுஞ்சேர்ந்தே யவ்விடநலமேயாகிற்
சுதமதன்போலவாழ்வன் சொல்லுமேரோகமில்லை. 4

சதுரநாற்கோணமூன்றிற் சவுமியரிருக்கநோக்க
எதிரிராகூடிநில்லா திருக்கினும்பாபரன்றி
மதுரமாய்மதியும்வீறி மனையதுநலமேயானல்
விதரணமாகிவாழ்வன் வினைதீர்ந்துரோகமில்லை. 5

எட்டினுலுதயந்தன்னி லிரவியுமிருக்கநோக்க
பொட்டெனவுதயோன்கூடிற் பொல்லாதபித்தரோகங்
கட்டியகச்சினுளே கனல்வண்ணனிருந்திட்டாலும்
விட்டிடாதிருக்கும்பித்த ரோகமென்றறிந்துகொள்ளே. 6

சீனமாமதியிருக்கச் சேர்ந்திடப்பாபர்தானும்
மீனமாங்கடகந்தேளு மிகுந்திடுமகாரனின்றல்
ஈனமீராறிலெட்டி லிருக்கினுஞ்சயமேயுண்டு
மானமுமுடையோனுகி மடிவனேக்ஷயரோகத்தில் 7

சரமதிலிராகிசுங்கன் தனியிராபாபர்கூட
அரவதிற்சனியுஞ்சோம னவருமேயாறெட்டாக
உரமுளலக்கினுதி யுறையுஞ்சரமெட்டேயாகில்
வாமதிலுதித்தோர்க்கெல்லாம் வந்திடுக்ஷயமேரோகம் 8

இந்திரண்டெட்டிற்புந்தி யிராசனுங்குசனேநோக்க
வந்திடவுதயத்தானும் வக்கிரநோக்கக்கூட
சந்தொட்டமதியுஞ்சனிஞ் சௌமியபார்வையன்றி
அந்தெட்டுக்குடையோன்லக்கின னுயினுற்சுரமேரிண்டு. 9

லக்கினம்பாபர்நிற்க ரண்டெட்டில்வெள்ளியாகில்
இக்கணமுதயத்தானு மிழிகுலமாயிருக்க
மெய்க்குருசோமனின்ற விடமதிற்பாபர்நோக்கிற்
பெக்கதுவுடனேகண்டு பிரமியவியாதியுண்டே. 10

எட்டிரண்டதிலேராகு விருக்கினுமுதயஞ்செவ்வாய்
மட்டுடன்சோமனின்ற மனையதிற்பாபர்நிற்க
விட்டிடாதிருக்கின்மூலம் விடையனும்விரையமானால்
தொட்டிடும்பீடைவியாதி தோன்றியமுதலாய்மாதே. 11

எட்டினிற்செவ்வாய்நிற்க வேழினிற்பாபர்நிற்க
மட்டினிலெட்டிரண்டின் மணியராகேதுநின்றால்
தொட்டிடுமுதித்தபோதே தோன்றியமுதலாய்மாதே
விட்டிடாரிணங்கள்கண்டு வீழ்வனேயமூரோகத்தில் 12

சனியுதயத்தினிற்கச் சந்திரனுறெட்டாக
இனிக்குசனிவரைப்பார்க்க விவனுக்கேகிரந்திரோகம்
பனிமதியுடனேபாபர் பார்க்கினுமிரத்தரோகம்
அனிமதிகுன்றினின்று லாசனரோகமுண்டே. 13

மகரகும்பத்திற்சோமன் மாறியேபாபர்கூட
அவருதைசெனித்தராசிக் காறெட்டேயாமேயாகில்
நகருதைராசியாள னடப்பன்றிநீசமாகில்
விகற்பமாய்க்கெடுதிரோகம் விளையுமேகுன்மமாக. 14

உதித்தலக்கினத்தில்ராகு வுதயவன்கூடநிற்க
பதித்திடவெட்டில்மந்தன் பாபருங்கூடிநிற்க
கதித்தவனிரவிலக்கினங் கலந்துடனின்றாகில்
செனித்தநாண்முதலாய்மாதே சென்மாதிவெள்ளைகுடம் 15

செனித்தலக்கினத்திற்பாபர் சேர்ந்துடனிராகுநிற்க
குனித்தநாலோனுநீசங் குணமீனமத்தமாகில்
இனிக்கரிசோமன்கூடி யிவனுமேசீணமானால்
மனுக்கொருநாளுமில்லா மார்பினிற்சூலைகாணும். 16

எட்டினிற்பாதிசெய்க்கு மிருந்தவன்மூடவனாகில்
தொட்டெனப்பாபர்பார்க்கத் தோன்றியவுதயத்தோனும்
மட்டுடன்பகையடைந்து மடிப்பஸ்தநீசமானால்
விட்டிடாமார்பிற்சூலை விளையுமேயதனிற்கண்டம். 17

அட்டமத்தோனுநீச மதுதனிற்கரிசெயாகில்
நட்டமாய்த்திங்கணிற்க நல்லுதயத்திற்பாபர்
இட்டமாய்நல்லோர்பார்க்க விருக்கவுமில்லாதாகிற்
பொட்டெனவருமேரோகம் பொல்லாதசிரசுபீடை 18

பூமனுமாறினிற்கப் புகுந்திடவெள்ளிதானுஞ்
சோமனுஞ்சனியுங்கூடச் சொல்லுதயத்திற்பாபி
காமனுக்கெட்டில்மன்னன் கருதியேநீசமானால்
போமதுசீவனில்லாப் பொல்லாதரணரோகத்தில். 19

சுங்கனெட்டதனினிற்கச் சூரியன்கூடச்சேர
இங்கிதமானபூம னிவர்க்கேழிலுதயமாக
அங்கையோர்சோமனின்ற வந்நிலைபகையேயாகில்
இங்கிதராசனீசமாயினால் ரணமேயுண்டு. 20

ஆறுமீராறிரண்டி லம்மனையாரும்பாபி
சேருமேயாகினல்ல சென்மாதியுடனேபாபர்
பாருமேபரிதிநீசம் பகையடைந்தரசனின்றால்
மாறுமேகேந்திரம்ரண்டு மனந்தடுமாறிநிற்பன் 21

இரவிமதிசனியுங்கூடி யிருந்திடப்பனிரண்டாக
அரவுசேயிரண்டினிற்க வவர்க்கேழிலாசனாகப்
பரவிகேந்திரத்திலாரோர் பகைநீசமூடமானால்
குறைமதியம்சைநீச மாயினாற்குருடனவன் 22

இருமூன்றாமிடத்திற்சோம னிரணியன்கூடநிற்க
வருதனமருவிராறில் வந்திடினாதயம்பாம்பு
குருசனியுடனேமூன்று கோணத்தின்பின்னேநிற்க
வருமதுகேத்ரவாணி வந்திடிற்குருடனாவன் 23

மூணிலாபத்தின்மன்னர் முன் பினாய்ப்பாபர்நிற்க
வேணுமென்றாறினீசம் விரும்புமங்கிசையேயானால்
பணுமோர்மதியமூன்றும் பிறையுடனீனமாகிற்
காணுமேகைகாலீனங் கண்டிடுமசதியாக 24

சரமதுலாபமாகச் சதுரைந்துதிறமாக
உரமதுவுபயமேழா யுடையவர்க்கேந்திரமாகிற்
சுரமதாய்க்காணும்பின்னே சோகமாய்விசாரமுண்டு
இரவுமோர்சுகமில்லாம லிவனுக்கேபேய்பிடிக்கும் 25

இந்திடமதுவிற்பூம னிருக்கினாங்கர்னமூலம்
வந்திடுந்தீராதாகும் வல்லவர்சுபர்நோக்கானால்
நொந்திடுந்தீங்கைந்தாண்டி னோக்கினாற்றீயர்கொல்வர்
எந்தடவாகிற்சீவனிறந்திடு மிதுநோக்காட்டில். 26

சூரியனிருந்தாற்சொல்லுஞ் சிலபூதமாகக்காணுஞ்
காரியோனிருக்கிற்காணுங் கனமகாபூதமாக
வீரியரிருக்கினல்ல விஷமதுகடித்துக்காணுங்
கூறியோன்சிந்தையாகிற் கொல்லுமெட்சனிபிடிக்கும் 27

மந்திரியிருக்கினல்ல மறையதேவதையேகாணுஞ்
சுந்தரனிருந்தாற்றூர்க்கை தோஷமாம்பசாசுகேது
வந்தரசுங்கனாகில் வலியராக்ஷதியேயாகும்
மந்தருஞ்சுபசேபார்க்கின் மரணமாய்நசிப்பர்மாதே 28

ஆறவனாதயனிற்க வந்துதயோனாஞ்செவ்வாய்
வேறதுயில்லார்கூடி வேணுமென்றிடத்தினிற்
ஏறவுமில்லைச்சோம னிருபிறையாகினின்றால்
தேறவொட்டாமனிற்குந் தெளியாதசுபகோராணும் 29

கற்பனையுதயந்தன்னிற் கண்டிடிற்கேதுவானல்
னிற்பதுகுளிகன்பத்தேழ் நாலினினின்றுனல்
அற்பருஞ்சுபருமற்ரு ரவரையேபாராருகிற்
சொற்பனங்காணுமாப்போற் றேவதைதெரியுமாதே 30

உதையத்திற்சுங்கனிற்கவோரேழின்முடவனுகச்
சிதையொத்துனின்றசோமன் செல்வரும்பாராதாகப்
பகையுற்றபாபர்பார்க்கிற் பசாசுகள்பூதங்காட்சி
மிகவொத்தமயிலினளே மேலுரைவியாழநீதி 31

ரோகம் முற்றும்.

ஆக-பாடல் 459.

வியாழபகவான்சொல்லிய

ஆயுள்மடிப்பறிய.

பொன்னுடன்றேவமந்திரி பொசிப்புடன்றிசையறிந்து
மன்னுடனுதித்தோர்க்கெல்லாம் வலமிடச்சக்ரங்கண்டு
விண்ணுடனுலகிலுள்ளோர் விபரமுமறியவேண்டி
என்னுடன்வியாழஞ்சொன்ன விம்மொழிதப்பாமாதே 1

திசையவன்பொசிப்பில்வந்தோன் றிரிகிலாச்சரமேயாகில்
விசையுளசக்கரத்தான் வெகுண்டதீம்பகையில்லாமல்
நிசமதுநல்லோராக நின்றவர்வருவாராகில்
அசையொருநாளுமில்லை யவனியிலிருப்பன்மாதே 2

சக்கரம்பிடித்தோன்பொசிப்போன் சமனாகவிருக்கினன்மை
வக்கரகத்தாராய்மூடம் வரும்பகையிடமிருக்கில்
நிற்கிறதிசைபொசிப்போ னீசமாய்ப்பகையோர்கூடி
நிற்கிறதில்லைசீவ னிசமிதுகேளுமாதே 3

வரியிருமாரகமேயாக வருமதுதிசைநாதர்க்கே
சரிவருபொசிப்பதற்குச் சரியிருமாரகமேயாக
இருவிதியிடத்தான்சக்ர மிருமாரகன்பொசிப்புமாகிற்
கரியொருநாளுநில்லாக் கண்டிடிலுடனேநாசம் 4

மூணுமாரகனைநோக்கி முடவனாரெட்டிலிற்க
காணவேதிசையோனாகிக் கனலவன்பொசிப்பேயாக
வேணுமாரகனுமிக்க மேவுசக்கரமேயாகில்
பூணுமேவிதியடைந்து போய்விடுங்குழவிநில்லா 5

பூரணச்சந்த்ரன்சக்ரம் புந்தியார்திசையுமாக
வாரணிசந்திரனாரும் வருந்திசைபொசிப்பேயாகில்

ஏரணிபுந்தியாகு மெரிசக்ரம்பொசிப்பேயானால்
காரணமாகத்தீங்கு கண்டிடுமுடனேசாவு 6

சனியுடனிருந்தோன்சக்ரந் தபனனூர்பொசிப்பேயாகில்
வினியுடன்றிசையுமாக வேந்தனா மைந்தனுண்ணில்
சனிபெறவாறெட்டாகிற் கனியவராகினாலும்
இனியொருநாளுனில்லா தேந்திழைமாதேசிவன் 7

மாரகமிடத்தினின்றோர் மனையவர்கொடும்பர்கண்டாய்
சீரணமாகச்சந்திரன்றிசை பொசிப்பிவரேயானால்
தேரணிமன்னராகிற் றிரும்பியேகொல்வர்பொல்லார்
ஈர்கொடுமாதேகேளாயிவரையே நம்பலாகா 8

அட்டமன்றிசையேயாகி லதற்கெட்டோன்பொசிப்பேயாக
நட்டமதிக்கெட்டோன்சக்ர நல்லட்டமாதியுண்ணில்
இட்டமர்கேந்திரமாகி விலருமேபொல்லாதாவர்
துட்டராய்க்கொல்வாகண்டாய் தோன்றியேயிருந்தாராகில் 9

எட்டவனுகமன்ன னிருந்திடவுதயந்தன்னில்
பொட்டெனவுதயத்தானும் போயிருந்தெட்டினிற்க
மட்டிலாச்சுங்கனூர்க்கு மாரகமிரண்டேயாக
திட்டெனவிவர்க்கேசக்ரந் திசைபொசிப்பானூற்சாவே 10

ஆறெட்டுக்குடையோராகி யவர்திசைபொசிப்பானாலும்
ஏறிட்டுக்கேந்திரமானோ ரிவர்கையிற்சக்ரமாகில்
மாறிட்டமதிசேய்நீலன் மணிச்சக்ரபொசிப்பேயானால்
வேறுபட்டேயுதிரங்கண்டு வீழ்வனேகண்டந்தப்பா 11

சேரமாரகமுயர்ந்தோன் றிசைவரும்போதூசக்ரங்
கூரனைப்பிடித்திட்டோனுங் கூடினூற்கொள்வன்மாதே
ஆருமோர்மாரகன்றிசையி லமர்ந்தவன்சகரமாகில்
பாரவன்கொல்லானன்றிப் பயின்றவனூக்வல்லோரே 12

உசந்தமாரகருமுன்னே யோடியேதிசையிருக்க
அசைந்தொருமாரகனேகொல்ல வாகாதுகண்டந்தப்பும்
இசைந்திவர்க்குயர்ந்தபோ திருவருங்கூடிக்கொல்வர்
கசைந்தொருவாமாரகமேயானூற் கண்டமேமிண்டந்தப்பும் 13

